விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 21 ஞாயிற்றுக்கிழமை (05.07.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 198

SATS-TECH ENGINEERS (PVT) LTD
0114562929, 0212228812, 0212225908




1 Year Subcription free with All Tamil + All sports
Including Setmax, Pogo,Cartoon network BBC,CNN

## குடாநாட்டுப் பத்திரிகை ஒன்றின் விளம்பர முகவர் வலம்புரிக்கு மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் பத்திரிகை ஒன்றின் விளம்பர முகவர் ஒருவரால் வலம்புரி நாளிதழுக்கு மிரட்டல் விடப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை வலம்புரி அலுவலகத்திற்கு பல தடவைகள் கையடக்கத் தொலைபேசியில் இருந்து தொடர்பு கொண்ட அவர், வலம்புரி நிர்வாகத்தினரை மிரட்டியுள்ளதுடன் தகாத வார்த்தைகளாலும் திட்டியுள்ளார்.

மீசாலையில் இருந்து கதைப்பதாக கூறிய பிரஸ்தாப நபரின் கையடக்கத் தொலைபேசி இலக்கத்தின் துணை கொண்டு உரியவரை கண்டறிய எடுத்த முயற்சியின் பயனாக, குறித்த நபர் யாழ்.குடாநாட்டுப் பத்திரிகை ஒன்றின் விளம்பர முகவர் என்பதும், அவர் யாழ்ப்பாணம் கோவில் வீதியில் வசிப்பவர் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, யாழ்.பிராந்தியப் பத்திரிகைகள் மூன்றுக்குமான பாதுகாப்பு நடவடிக்கைக்குப் பொறுப்பான யாழ்.மனோகரா சந்தி இராணுவப் பொறுப்பதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த இராணுவப் படை அதிகாரி தாம் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

படையினரின் நடவடிக்கை திருப்தி அளிக்காதபட்சத்தில் (14ஆம் பக்கம் பார்க்க)

## 150 கிலோ தங்க நகைகள் புதுக்குடியிருப்பில் மீட்பு

(கொழும்பு)

புதுக்குடியிருப்புப் பகுதியில் படையினர் மேற்கொண்டுவரும் தேடுதல் நடவடிக்கைகளின்போது 150 கிலோவிற்கும் அதிகமான தங்க நகைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

நகைகளின் உரிமையாளர்களை கண்டுபிடித்து உரியவர்களிடம் அவற்றை ஒப்படைக்கப்போவதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார, சுமார் 150 கிலோ (14ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களின் துரதிர்ஷ்டமான நிலைக்கு இந்தியாவும் சீனாவுமே பொறுப்பு

## பாகிஸ்தான் ஒப்சேவர் குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

இந்து சமுத்திரப் பிராந்தியம் மற்றும் உலகளாவிய அதிகாரத்தை பெறுவதில், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் இடம்பெற்ற போட்டியில் இலங்கைத் தமிழர்கள் துரதிர்ஷ்டவசமாக சிக்கிக் கொண்டதாக பாகிஸ்தான் ஒப்சேவர் நாளிதழ் தெரிவித்துள்ளது. இலங்கைத் தமிழர்களின் கசப்பான அனுபவங்களுக்கும், அவர்களின் சுதந்திர முறியடிப்புக்கும் இந்தியாவும் சீனாவும் பொறுப்புக் கூற வேண்டும் என அந்த இதழ் குறிப்பிட்டுள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

## நயினை நாகபூசணி அம்மன் ஆலய தேர், தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு விசேட பேருந்து சேவைகள்

(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூசணி அம்மன் ஆலய தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு நாளையும் நாளை மறுதினமும் விசேட பேருந்து சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ் சாலை முகாமையாளர் எஸ்.யோகநாதன் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் அதிகாலை 5 மணி முதல் யாழ்.மத்திய நிலையத்திலிருந்து பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும் குறிகாட்டுவான் இறங்கு துறையிலிருந்து இறுதி நேரப் பேருந்து மாலை 6 மணிக்குப் புறப்படும் எனவும் அவர் கூறினார்.

பயணிகள் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அங்கிருந்து புறப்படும் பேருந்துச் சேவையின் நேரம் அதிகரிக்கப்படலாம் எனவும் தெரிவித்துள்ளார். இதேவேளை திருவிழாவிற்கு செல்லும் பயணிகளைக் கருத்தில் கொண்டு (14ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர் உட்பட இருவர் வவுனியாவில் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாரதிபுரம் தமிழ்க்கலவன் பாடசாலையின் அதிபர் ஒருவர் உட்பட இருவர் நேற்று வவுனியாவில் அடையாளம் தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பாடசாலை அதிபரும் மற்றொருவரும் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்துகொண்டிருந்த போதே பாரதிபுரம் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட பாடசாலை அதிபர் ரமேஷ் கண்ணா என (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்தேவி ரயில் சேவை விஸ்தரிப்புக்கு கல்வியமைச்சு பூரண ஒத்துழைப்பு

(கொழும்பு)

வடக்கின் வசந்தம் யாழ்தேவி ரயில் சேவை விஸ்தரிப்புத் திட்டத்திற்கு நாடளாவிய ரீதியில் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது.

நேசத்தின் தரிப்பிடம் என்ற பெயரில் கல்வியமைச்சு இதற்கான விசேட வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் பிரகாரம் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்களிப்புடன் ஆனையிறவு ரயில் நிலையத்தை புனரமைப்புச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

வட மாகாணம் தவிர்ந்த நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உதவிகளைப் பெற கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் இம்மாதம் 7 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரையான இருவார காலத்துள் பாடசாலைகளிலிருந்து நிதியுதவிகளைப் பெற்றுக் (14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தொடர்ந்தும் ஆயுதங்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணம் விடுதலைப் புலிகளிடமிருந்து முற்றாக விடுவிக்கப்பட்டு இரு வருடங்களாகிவிட்டன. எனினும் விடுதலைப் புலிகள் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களைப் பாதுகாப்பு படையினர் தொடர்ந்தும் கண்டுபிடித்து வருகின்றனர்.

குறிப்பாக இவ்வாரத்திலும் 5க்கும் மேற்பட்ட இடங்களில் இவ்வாறு மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களும் வெடிபொருட்களும் பாதுகாப்பு தரப்பினரால் மீட்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு (14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. வாவியில் மோதல் புலி உறுப்பினர் படுகாயம்

### படைத்தரப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிரான்குளம் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டிருக்கின்றார். மேலும் இரண்டு படையினர் காயமடைந்திருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இந்த மோதல் சம்பவத்தில் படுகாயமடைந்த விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் தம்மால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக படைத் தரப்பு வட்டாரங்களிலிருந்து தெரிய வருவதாவது, படையினர் சுற்றுகாவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது (14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நலன்புரி முகாம்களில் புலிகளுக்கு ஆதரவான சுவரொட்டிகள்

### பொலிஸார் தீவிர விசாரணை

(கொழும்பு)

வவுனியாவிலுள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவரொட்டிகள் பல மர்மமான முறையில் ஒட்டப்பட்டிருப்பதையடுத்து பொலிஸாரும் புலனாய்வுத்துறையினரும் விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்த் சுவரொட்டிகள் கையால் எழுதப்பட்டவை எனவும் இவை எங்கிருந்து வந்தன; யாரால் ஒட்டப்பட்டன என்பதையிட்டு தீவிரமான விசாரணைகள் தொடங்கியிருப்பதாகவும் பொலிஸாருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த முகாம்களில் 24 மணிநேரமும் இராணுவ மற்றும் பொலிஸாரின் கண்காணிப்பு இருக்கின்ற அதேவேளையில் புலனாய்வு மற்றும் கிளர்ச்சிக்கு எதிரான படைத்துறைப் பிரிவுகளின் அதிகாரிகளும் கடமையாற்றுகின்றனர். இந்த முகாம்களில் விடுதலைப் புலிகளின் (14ஆம் பக்கம் பார்க்க)



நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களுக்கான நிதியுதவி நேற்று இந்து அமைப்புகளின் ஒன்றியத்திடம்கையளிக்கப்பட்டது இந்து அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் நல்லை ஆதீன முதல்வரிடம் கோண்டாவில் மேற்கு புவனேஸ்வரி ஆலய பரிபாலன சபையால் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயும் உடு புடைவைகளையும் ஆலய பரிபாலன சபையினர் கையளிப்பதை முதலிரு படங்களிலும், வண்ணார்பண்னை காட்டுத்தறை ஸ்ரீ அம்பலவாணர் விக்னேஸ்வர கோயில் சார்பாக நிதி வழங்குவதையும் ,கனடா வாழ் அன்பர்களால் சேகரிக்கப்பட்ட 50 ஆயிரம்ரூபாய் நிதி வழங்கப்படுவதையும் நிகழ்வில் சிறப்புப் பிரதி நிதியாக கலந்து கொண்ட அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலர் கந்தையா நீலகண்டன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# கடற்றொழிலை மேற்கொள்வதிலுள்ள தடைகளை முற்றாக நீக்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

கடற் தொழிலில் 24 மணி நேரமும் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ் குடாநாட்டு கடற் தொழிலாளர்களுக்கு தங்களது தொழில்துறைகளில் சுதந்திரமாகவும் விரிவாகவும் ஈடுபட இன்னும் சிற்சில தடைகள் இருப்பதைதான் உணர்ந்துகொண்டுள்ளதாகவும் நாளடைவில் இவ்வாறான தடைகள் அனைத்தையும் படிப்படியாக நீக்குவதற்கு தான் தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் எனவே கடற் தொழிலாளர்கள் தங்களது எதிர்காலம் குறித்த நம்பிக்கையுடன் இருக்கலாம் என்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாசையூர் சென். அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் அவர்கள் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சில்வேஸ்த்ரி எலன்ரின் யூட் உதயன் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்து உரையாற்றும் போது, எமதுமக்களுக்கு வழிகாட்டுவதாகக் கூறிக் கொண்ட தலைமைத்துவங்கள் அனைத்தும் இன்று எம் மக்களை பாரிய அழிவுக்குள் கொண்டுவந்து விட்டிருக்கின்றன. இந்த அழிவிலிருந்து நாம் உடனடியாக மீள வேண்டிய கட்டாயத்தில் இன்று நாம் இருப்பதால் இணக்க அரசியலில் ஈடுபட்டு எமக்கான மீட்சியை முதலில் நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

தமிழ் சமூகம் தோற்றுக் போன சமூகமென ஒரு சாரார் கூற முனைகின்றனர். தமிழ் சமூகம் தோற்றுப் போன சமூகம் அல்ல என்றும், தமக்குள் பலவந்தமாக குடியிருந்த பயங்கரவாதத்தை தோற்கடித்த நிலையில் தமிழ் சமூகம் தனது எதிர்கால சுபீட்சத்துக்காக இன்று எழுந்து நிற்கும் ஒரு சமூகமாகும். நான் அரசியலில் இருக்கும் வரையில் தமிழ் சமூகம் ஒரு போதும் தோற்கமாட்டாது. எதிர்வரும் யாழ் மாநகர சபையின் வெற்றியுடன் எமது மக்களுக்கான சுபீட்சமான எதிர்காலம் படிப்படியாகக் கட்டிஎழுப்பப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரி வித்தார். (ச)



## குறிகாட்டுவானில் விசேட ஒழுங்குகள்

(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூசணி அம்மன் ஆலய தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு வேலணைப் பிரதேச சபையினால் குறிகாட்டுவானில் விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாகனப் பாதுகாப்பு நிலையம் ,குடிநீர் மற்றும் மலசல கூட வசதிகள் ,வீதி ஒழுங்குகள் என்பன விசேடமாக மேற் கொள்ளப்பட்டுள்ளன. (ச)

## மூன்றாவது அணி வீரர்கள் செவ்வாயன்று பயணம்

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக விளையாட்டு வீரர்கள் அடங்கிய மூன்றாவது அணி நாளை மறுதினம் 7 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை திருகோணமலைக்குச் செல்லவுள்ளன.

அவர்களை அன்று அதிகாலை 5 மணிக்கு வலிகாமம் வலயக் கல்விப் பணிமனைக்கு சமுகமளிக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

## நயினை அம்பாள் திருவிழா யாழ். எவ்.எம்மில் நேரடி ஒலிபரப்பு

(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூசணி அம்பாள் ஆலய சப்பறம், தேர்திருவிழா மற்றும் தீர்த்தத் திருவிழா நிகழ்வுகள் யாழ்.எவ்.எம். வானொலியில் நேரடி ஒலிபரப்புச் செய்யப்படவுள்ளன. சப்பறத் திருவிழா இன்று இரவு 9.30 மணி தொடக்கம் 10.30 மணி வரையும், தேர்த்திருவிழா நிகழ்வுகள் நாளை காலை 8 மணி தொடக்கம் 10 மணி வரையும், தீர்த்தத் திருவிழா நிகழ்வுகள் நாளை மறுதினம் மதியம் 12 மணி முதல் ஒரு மணி வரையும் ஒலிபரப்புச் செய்யப்படவுள்ளன. (ச)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.சி.மாணிக்கராஜா
(S.L.P.S-I)
B.A. (HONS), Dip. in Edu.
M.ed S.P.L.S - CANADA

யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி தற்போது நல்லூர்க் கல்விக் கோட்டத்தின், கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுள்ள திரு.சி.மாணிக்கராஜா அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.
கோண்டாவில்
(2918)


# நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் யாழில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் செயற்படும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயற்றிட்டத்தினால் நல்லூர் பிரதேசத்திற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்திலும் யாழ். பிரதேச செயலகத்துக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 18 ஆம்திகதி சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியிலும் நடத்தப்படவுள்ளது.

இந் நடமாடும் சேவையில் நீதி அமைச் சின் செயலாளர் கே. கம்லத், ஆட்பதிவுதிணைக்கள ஆணையாளர் ஏ.ஜி தர்மதாஸ, பதிவாளர் திணைக்கள பதிவாளர் நாயகம் மற்றும் உதவிப் பதிவாளர்நாயகம் ஆகியோர் கலந்து கொண்டு சேவைகளை வழங்கவுள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலகத்துக்கான நடமாடும் சேவையில் விசேடமாக - சட்பரீதியான ஆவணங்களான பிறப்பு, இறப்பு, விவாக அத்தாட்சிப் பத்திரங்களையும் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதோடு யாழ். பிர தேச செயலகத்துக்கான நடமாடும் சேவையானது சட்பரீதியான ஆவணங்களான பிறப்பு, இறப்பு , விவாக அத்தாட்சிப் பத்திரங்களையும் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பான முறைப்பாடுகள் இலஞ்சம் மற்றும் ஊழல்தொடர்பான முறைப்பாடுகள் என்பவற்றையும் ஆராயப்படவுள்ளதாக நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் சட்டத்தரணி கே.டிலானி அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)


## காணி விற்பனைக்கு

மானிப்பாய் சந்தைக்கு மிக அண்மையில் அமைதியான சூழலில் இரு வீடுகள் கட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளிற்கு :-
077 6916929
(2914)

## விற்பனைக்கு

பொற்பதி வீதி, கந்தர்மடம், மணியகாரன்லேன், ஆனைக்கோட்டை, பிரம்படிலேன் ஆகிய இடங்களில் வீடுகள், காணிகள் விற்பனைக்கு உண்டு. நல்லூர், யாழ்ப்பாணம், பிறவுண் றோட், மாம்பழம் சந்தி, வேம்படி வீதி பகுதிகளில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். தரகர் தேவையில்லை.

சேவை முகவர்
தொடர்பு : சுந்தரம்
தொடர்பு நேரம்:- பகல் 1 மணி-2 மணி
T.P- 021 2229177
(2916)

## நெற்செய்கையாளர்களுக்கான அடையாள அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

2009 ஆம் ஆண்டு அரியாலை கிழக்கில் நாவலடி வரையும் உள்ள நெற்காணிகளில் நெற்செய்கை மேற்கொள்வதற்கு ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்டவர்கள் அனைவரும் விவசாய சம்மேளனத்துடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் தமது விசேட அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அரியாலை விவசாய சம்மேளனம் கேட்டுக் கொள்கின்றது.

அத்துடன் இதுவரை பதிவுகளை மேற் கொள்ளாதவர்களும் இந்தக் கால அவகாசத்தைப் பயன்படுத்தி பதிவுகளை மேற் கொண்டு தங்களுக்கான விசேட அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (6)

## புனித இராயப்பர் திருவிழா

(நல்லூர்)

புன்னாலைக்கட்டுவன் புனித இராயப்பர் ஆலயத் திருவிழா கடந்த 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடை பெற்று வருகிறது.

பத்தாம் நாளாகிய இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணிக்கு திருச் செபமாலையும் 6.15 மணிக்கு திருப்பலி இறை ஆசீரும் இடம்பெறவுள்ளன. (6-134)

## மத்தியஸ்தர் சபைக்கு தெரிவானோருக்கு பயிற்சி

(நல்லூர்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான மத்தியஸ்தர் சபைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. (6-134)

## வருடாந்த பொதுக்கூட்டம்

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் சி. ஆனந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் அனைத்து அங்கத்தவர்களும் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (6-134)

## மக்கள் வங்கியின் 48 ஆவது அகவையை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கான பரிசுத் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 48 ஆவது அகவையை முன்னிட்டு அவ் வங்கியினால் வாடிக்கையாளர்களுக்கான புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ஜுலை முதலாம் திகதி முதல் செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் ரூபா. 5 ஆயிரம் பெறுமதியான 'சங்வத்சர இத்துரும் பத' சான்றிதழ்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில், குலுக்கல் மூலம் முதல் பரிசை வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு கொழும்பு மாவட்டத்தில் அழகிய ஆடம்பர வீடு ஒன்றை வெல்லும் அரிய வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதுடன் ஒவ்வொரு கிளையிலிருந்தும் தலா ஒரு அதிர்ஷ்டசாலி வீதம் தெரிவு செய்யப்பட்டு அழகிய தங்க நாணயம் பரிசாக வழங்கப்படவுள்ளது.

அது மட்டுமன்றி, ஜுலை மாதத்தில் ரூ. 50 ஆயிரத்திற்கு மேல் ஒரு வருடத்திற்கென வைப்பிலிடும் நிலையான வைப்பு வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பரிசில்களையும் வழங்கவுள்ளதாக மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் த.க. ஆனந்தராசா தெரிவித்துள்ளார். (ஓ-6)

## பாரவூர்தி உரிமயாளர்களுடனான அமைச்சர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பாரவூர்திகளின் உரிமையாளர்களுக்கும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இன்று காலை 9 மணிக்கு யாழ். குடாநாட்டு பாரவூர்தி உரிமையாளர்கள் அனைவரும் யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (6)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 120 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 50 |
| தக்காளி | 300 | 300 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | -- | 150 | -- |
| கரட் | 80 | 80 | 80 |
| பூசணி | 30 | 35 | 30 |
| புடோல் | 20 | 30 | 20 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 50 | 40-50 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | -- |
| பாகற்காய் | 60 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 20-40 | 50 | 40 |
| கரணைக் கிழங்கு | -- | -- | -- |
| பயிற்றங்காய் | 60 | 70 | 60 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 40 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 350 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 10 |
| தேசிக்காய் | 120 | 120 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 35 | 25 |

## வாரம் ஒரு தகவல்

### காதல் பரிசு

"உலகே மாயம்..."

"இந்த வயதிலேயே ஏன் இப்படி ஆரம்பித்து விட்டீர்கள்?"

"அப்படி ஆகிவிட்டது சேர் உலகம். வரவர மனிதர்களை நம்பவே முடியவில்லை."

"என்ன சொல்றீங்க?"

"போன மாதம் சீனாவுக்குப் போயிருந்தேன்"

"சரி..."

"அங்கே ஓர் இளம் பெண். எங்களுக்கு சுற்றுலா வழிகாட்டி. எல்லா இடங்களையும் சுற்றிக் காட்டினா... அடடா ... என்ன அழகு... எவ்வளவு சுறுசுறுப்பு... எத்தனை உற்சாகம்... பழைய வரலாற்றையெல்லாம் பளிச்சென்று புரியும்படி சொல்கிறா"

"சரி அதற்கென்ன இப்போ'

"அவளுக்கு ஏதாவது பரிசு கொடுக்கலாம் என்று நினைத்து என்கையில் இருந்த கைக்கடிகாரத்தைக் கழற்றி அவளிடம் அன்பளிப்பாகக் கொடுத்தேன்."

"வாங்கிக் கொண்டாளா?'

"வாங்கிக் கொண்டாளாவது...? நான் வாங்காமல் தப்பித்ததே பெரிய காரியம்."

"என்ன சொல்றீங்க?"

"ஆமாம் சேர். அவர்களுடைய ஊரில் கடிகாரத்தை ஒருவருக்கு கொடுப்பது என்பது... அவர்களுடைய இறுதி யாத்திரை தினத்தை ஞாபகப்படுத்துவது மாதிரியாம்."

"வெளியூருக்குப் போய் இப்படி விபரமில்லாமல் நடந்து கொள்ளலாமா?"

"உள்ளூரில் மட்டும் என்னவாம்?"

"என்ன சொல்றீங்க"

"என்னோடு நெருங்கிப் பழகும் சிநேகிதன் ஒருவனிடம் யோசனை கேட்டேன். என் காதல் நிறைவேற ஏதாவது வழி சொல் என்றேன். உடனே அவன் தன்னிடமிருந்த விலையுயர்ந்த கடிகாரத்தை கழற்றி இதை உன்காதலிக்குப் பரிசாகக் கொடு என்று சொல்லி என்னிடம் கொடுத்தான்"

"கொடுத்தீர்களா?"

"கொடுத்தேன். உடனே அவள் பளாரென்று அறைந்து விட்டாள்."

"ஏன்?"

"போனவாரம் திருட்டுப் போன அவளுடைய கடிகாரம் தானாம் அது."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

*05.07.2009*
*(ஆனி 21, ஞாயிற்றுக்கிழமை)*
*திரயோதசி முற்பகல் 11.44 மணிவரை*
*கேட்டை முன்னிரவு 9.15 மணிவரை*
*இராகுகாலம் 4.27-5.57 மணிவரை*
*சுபநேரம் 8.57-10.27 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | அமைதிக்குறைவு, வீண் தொல்லை, காரியதாமதம், போசன சுகம். |
| இடபம் | எடுத்த கருமங்கள் கைகூடும், உறவினர் வருகை, தெய்வ சிந்தை, வாகன சுகம். |
| மிதுனம் | ஆரோக்கிய நிலை, உறவினர் சந்திப்பு,அதிகபிரயாசை,விருந்துபசாரம். |
| கடகம் | புத்திரரால் மனஸ்தாபம், முயற்சி தாமதம், பணக்குறைவு, ஆரோக்கியக் குறைவு. |
| சிங்கம் | மனச் சஞ்சலம், தொழில் சிந்தை, அற்பர் உறவு, சுபசெய்தி. |
| கன்னி | இனிய சம்பவம், வாக்கு மேன்மை, தெய்வ சிந்தை, போசன சுகம். |
| துலாம் | வேலைச்சுமை, உறவினர் மனஸ்தாபம், முயற்சி தாமதம், பொருள் விரயம். |
| விருச்சிகம் | சயன சுகம், உறவினர் வருகை, தேக நலன், தெய்வ சிந்தை. |
| தனுசு | அமைதிக் குறைவு, திடீர் பயணம், உறவினர் சந்திப்பு, சுபசெலவு. |
| மகரம | குடும்ப மகிழ்ச்சி, விருந்துபசாரம், முயற்சிகைகூடும்,பொருள்சேர்க்கை. |
| கும்பம் | சுபசெய்தி, உற்சாகம், அதிகாரம், முயற்சி கைகூடும். |
| மீனம் | உடல் உழைப்பு, ஆரோக்கியக் குறைவு, தேவையற்ற அச்சம், புதிய திட்டம். |

வளவன்

## எட்டாக் கனி

கனவுகளும்
கண்ணீருடன் கலந்து
வாழ்க்கையே அஸ்தமனமானது!

வறுமையும்
இளமையில் புதைந்து
இலட்சியமே பூச்சியமானது!

கல்வியும்
பணத்தில் படுத்து
சமத்துவமே சமாதியானது!

சொந்தங்களும்
யுத்தத்தில் சிதைந்து
உறவுகளுமே அகதியானது!

நிம்மதியும்
நித்திரையில் தொலைந்து
நிஜமே கானலானது!

முதுமையும்
இல்லத்தில் இணைந்து
அன்பே அநாதையானது!

உரிமையும்
வன்முறையில் வளர்ந்து
வருங்காலமே ஏக்கமானது!

ஜே. எஸ். ராஜ்
யாழ். பல்கலைக்கழகம்

## சங்கமம்

ஆடிடும் வாழ்க்கை
ஆறடியில் சங்கமம்!
பாய்ந்திடும் ஆற்று நீர்
பாரிய ஆழியினில் சங்கமம்!
வானத்துத் தாரகைகள்
வர்ண அழகினில் சங்கமம்!
என் உள்ளத்து உணர்வுகளோ
உன் உள்ளத்தினுள் சங்கமம்

மகே -மேனன், கொற்றையூர்.

# கல்வி மென்பொருள் ஆக்கப் போட்டியினை நடத்த கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

அரச பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான கல்வி மென்பொருள் ஆக்கப் போட்டியை இவ்வருடமும் நடத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இப்போட்டி கல்வி அமைச்சின் இடைநிலைக் கல்வி நவீனமயச் செயற்றிட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் இலங்கையின் மைக்ரோ சொப்ட் நிறுவனம் உட்பட மேலும் பல நிறுவனங்களால் இதற்கு உதவி வழங்கப்படுகிறது.

பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்காக 2 பிரிவுகளின் கீழ் இப்போட்டியை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கான உரிய போட்டி 1-8, 9-11 மற்றும் 12-13 தரங்களுக்காக கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கான போட்டி என 3 பிரிவுகளின் கீழ் நடத்த இருப்பதுடன் அம்மூன்று பிரிவுகளுக்குமாக தனித்தினயாக வெற்றியீட்டிய ஆசிரியர்களுக்கான பணப்பரிசு, கல்வி புலமைப் பரிசில் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மாணவர்களை பொறுத்தமட்டில் பாடசாலை மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்றுக் கொள்ளும் ஆக்கங்கள் மாத்திரமே மாகாண மட்ட போட்டிக்கு தெரிவாகும். மாணவர்களுக்கான போட்டி 1-8 தரத்தின் மாணவர்கள் , 9-11 தரத்தின் மாணவர்கள் மற்றும் 12-13 தரத்தின் மாணவர்கள் என 3 தனிப் பிரிவுகளின் கீழ் தனித்தினயாக போட்டி நடைபெறம். இதில் தரம் 12-13 மாணவர்களுக்கான போட்டி உயர்தர பிரதான பாடவிதானம் சார்ந்த மென்பொருள் பயன் பாட்டை பிரபலப்படுத்தவதற்காக உயர்தர விஞ்ஞான பிரிவு, உயர்தர கணித பிரிவு, உயர் தர கலைப் பிரிவு, உயர்தர வர்த்தகப் பிரிவு என குறிப்பிடப்பட்டவாறு மாகாண மட்டத்தில் மற்றும் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்படுபவர்களுக்கு விசேட திறமைச் சான்றிதழ், கல்வி புலமைப்பரிசில் மற்றும் பணப்பரிசும் வழங்கப்படும். இதேபோல் தரம் 1-8வரை, தரம் 9-11வரையான மாணவர்களுக்கும் பணப்பரிசு, கல்வி புலமைப்பரிசில், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**போட்டிக்கான பொது நிபந்தனைகள்-**

ஒரு கல்லூரியில் எந்த ஒரு ஆசிரியர் மாணவருக்கும் வரையறையின்றி கல்வி மென்பொருள் ஆக்கப்போட்டி தொடர்பில் கலந்து கொள்ளமுடியும். ஆசிரியர்கள் மற் றும் மாணவர்கள் ஆக்கங்களை சமர்ப்பிக்கும் போது தாம் போட்டியிடும் பிரிவுக்குரிய தரங்களின் ஆக்கங்களை மாத்திரம் சமர்ப்பிக்க வேண்டும். ஆக்கங்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும்.

இம் மென்பொருள் ஆக்கங்கள் பாடசாலை பாடவிதானத்துக்கு பொருந்தக் கூடியவாறு அறிவு விருத்தியடையக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டு தனித்தனியாக இறுவெட்டில் (சிடி) யில் பிரதி செய்து விண்ணப்பத்தினை அதிபர் உறுதி செய்து அனுப்புதல் வேண்டும். மாணவர்களினால் சமர்ப்பிக்கப்படும் ஆக்கங் களை இம்மாதம் (ஜுலை) 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கல்லூரியின் மதிப்பீட்டுக்காக அதிபரிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஆசிரியர்களினால் சமர்ப்பிக்கப்படும் ஆக்கங்கள் இம்மாதம் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு இடைநிலை கல்வி நவீனமயசெயற்றிட்டத்தின் மாகாண செயற்றிட்ட அலுவலகத்துக்கு கையளித்தல் வேண்டும்.

மேலதிக தகவல்கள் சகல அரச பாடசாலைகளினதும் அதிபர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை வடக்கு ஈஞ்சடி அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாம்பிகா சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் எதிர் வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி 18 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இவ் உற்வசத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை சப்பறமும் 17 ஆம் திகதிவெள்ளிக்கிழமை காலை 12 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (6-4)

## முன்பள்ளி விளையாட்டு விழா

அச்செழு வளர்மதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அச்செழு வளர்மதி முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நிலையத் தலைவர் இ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.


இவ்விழாவில் பிரதமவிருந்தினராக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகிழக்கு அமைப்பாளர் எம்.தர்மராஜா கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்திணர்களாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்கு கோப்பாய் பிரிவு தலைவர் இ.மயில்வாகனம் , அச் செழு சைவப் பிரகாச வித்தியாலய அதிபர். ச.வேலழகன், அச்செழு விவசாய சம்மேளனத் தலைவர் எஸ்.லட் சுமணன் , அச்செழு கிராமசேவையாளர் க.நாகேந்திரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-134)



நயினாதீவு ஸ்ரீநாக பூசணி அமுத சுரபி அன்னதான சபையின் 50ஆவது ஆண்டு பொன் விழாவின் அன்னதான ஆரம்பத்தினை நாகரத்தினம் சக நிறுவன உரிமையாளர் ஈ.எஸ்.பி. நாகரெத்தினம் தம்பதிகள் நயினை நாகபூஷணி அம்பாளின் கொடியேற்றவிழா அன்று ஆரம்பித்து வைத்தனர். இந்நிகழ்வில் அன்னையின் திருவுருவப்படத்தினை அன்னதான சபை மண்டபத்திற்கு எடுத்துச்செல்லப்படுவதை படத்தில் காணலாம்.




தேசிய உணவு வாரத்தை முன்னிட்டு நாமே பயிரிடுவோம் நாட்டை முன்னேற்றுவோம் என்னும் தொனிப்பொருளில் கச்சேரியில் நடைபெ[illegible] நிகழ்வில் மீளெழுச்சித் திட்ட பிரதித்திட்டப்பணிப்பாளர் உரையாற்றுவ[illegible] மேடையில் அரச அதிபர் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் [illegible] காணலாம்.



கரவை தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய வரலாற்று நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் நூல் ஆசிரியர் கந்தப்பு ஆனந்த குமாரசுவாமி வரவேற்புரை நிகழ்த்துவதையும் அருகில் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

பருத்தித்துறை
ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின்
50 ஆவது ஆண்டினை முன்னிட்டு
இரத்ததான முகாம் இன்று
இடம்: பருத்தித்துறை திக்கமுனை மைதானம்.
காலம்: இன்று (05.07.2009) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 8.00 மணி.
- இரத்ததானம் இலகுவானது, பாதுகாப்பானது, உயிர்காப்பது.
- தானங்களில் மிக உயர்ந்தது.
- குருதிக்கொடை மூலம் உயிர் காக்கும் உன்னதமான பெரு இலட்சியத்தை நிறைவேற்றுவோம்.

இவ்வருடம் 50 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்து பொன்விழாவை நடத்திக்கொண்டிருக்கும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தையும், கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள புனிதமான இரத்ததான நிகழ்வையும் நிகழ்வின் போது குருதியை வழங்கவுள்ள குருதிக் கொடையாளர்களையும் மனதார வாழ்த்துவதுடன் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து தமது பங்களிப்பையும், ஒத்துழைப்பையும் நல்குமாறு அன்புடன் அழைத்து விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

- பருத்தித்துறை வர்த்தகர் சங்கம்
- பருத்தித்துறை ஜெஸ்வின் கணனிப் படிப்பகம்
- பருத்தித்துறை எஸ்.பி.எம்.பதிப்பகம்.
- பருத்தித்துறை வாழ்.மக்கள்

(சி/2707)

# யுனெஸ்கோவினால் இலங்கைக்கு 50 ஆயிரம் அமெ. டொலர் நிதியுதவி

(கொழும்பு)

அகதி முகாம்களில் வாழ்கின்றவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு யுனெஸ்கோ 50 ஆயரம் அமெரிக்க டொலர்களை நிதயுதவியாக வழங்கியுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கல்வியமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுவின் சபைத் தலைவரும் யுனெஸ்கோ நிறைவேற்று சபையின் பிரதிநிதியுமான அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்கவே இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சமாதானம் மற்றும் சகோதரத்துவத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கை எனும் வேலைத்திட்டத்தின் கீழ் அகதிகள் வாசிப்பதற்கு புத்தகங்களை பெற்றுக்கொடுத்தல், மனோவியல் வேலைத்திட்டம் ,சோம்பலை முறியடித்தாலுக்கான ஆலோசனைகளை வழங்குதல் ஆகியனவை முன்னெடுக்கப்பட விருக்கின்றன. (6)

# சோதிடர் சந்திரசிறி விடுதலை

(கொழும்பு)

குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரபல சோதிடர் சந்திரசிறி பண்டார கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மாலை ஆஜர் படுத்தப்பட்ட போதே இவர் விடுதலை செய்யப்பட்டார். இவர் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கு போதியளவான சாட்சியங்களும் ஆதாரங்களும் இன்மையினாலேயே இவர் விடு தலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு கின்றது.

அரசாங்கம் விரைவில் கலையும், பிரபாகரனை தானே பில்லி சூனியம் செய்து கொலை செய்ததாக சோதிடம் கூறியிருந்தமையினாலேயே இவர் கொழும்பு குற் றப்புலனாய்வுபிரிவினரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை க்கு உட்படுத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# கல்வி நிர்வாக சேவை வெற்றிடங்கள் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் நிரப்பப்படும்

## கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் I ஆம் தரத்தில் நிலவும் வெற்றிடங்கள் யாவும் ஆகஸ்ட் மாத முடிவுக்குள் நிரப்பப்படவுள்ளன. இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை கல்வியமைச்சு மேற்கொண்டுள்ளது.

கல்வி நிர்வாக சேவையில் II ஆம் தரத்தில் சேவையாற்றிய 24 அதிகாரிகளை கடந்த மாதம் I ஆம் தரத்துக்கு பதவி உயர்த்தும் வரை கடந்த 8 வருடங்களாக I ஆம் தரத்தில் நிலவும் வெற்றிடங்கள் நிரப்பட வில்லை.

சில தொழிற்சங்கங்கள் சட்ட நடவடிக்கையில் இறங்கியமை போன்ற பல காரணங்கள் இதற்கு கூறப்படுகின்றன. தற்போது I ஆம் தரத்தில் 200 வெற்றிடங்கள் நிலவுகின்றன. I ஆம் தரத்துக்கு பதவி உயர்த்தப் பட்ட 24 அதிகாரிகளில் கூட 19 அதிகாரிகள் ஓய்வு பெற்றுள்ளனர்.

மாகாண கல்விப் பணிப்பாளர்கள், உதவி மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ,சுமார் 20 உயர் கல்லூரி அதிபர்கள் ஆகிய I ஆம் தர பதவிகளிலேயே இவ் வெற்றிடங்கள் நிலவுகின்றன.

I ஆம் தரத்துக்கு தகுதியானவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை தற்போது நடைபெற்று வருகின்றது. I ஆம் தரப் பதவிகளில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பதில் கடமையாற்றும் தரம் II , தரம் III ஐச் சேர்ந்தவர்கள் நேர்முகப் பரீட்சையில் தேறினால் அதே பதவிகளில் அவர்கள் அமர்த்தப்படவுள்ளனர்.

I ஆம் தரத்தில் நிலவும் 200 வெற்றிடங்களில் 198 நிரப்படவுள்ளன. இதில் 27 மா காணப்பணிப்பாளர்கள் மற்றும் மேலதிக மாகாண பணிப்பாளர்கள், 93 வலயக் கல்விப் பணிப்பாளர்கள், 12 அதிபர்கள் அடங்குவர். (6)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் கொட்டிகை கோயிற்குளம் அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இவ் உற்சவத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை சப்பறமும், நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

தேர்த்திருவிழாவன்று நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கவுள்ளார். (4-29)

# குருபூர்ணிமா பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ இராம கிருஷ்ண சமிதியின் குருபூர்ணிமா பிரர்த்தனை நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தாவடி, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் 'குருவின் மகத்துவம்' என்னும் விடயத்தில் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு ஆன்மீக உரை நிகழ்த்தவுள்ளார். (6-4)

# தேவாரத்திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)


அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பூரணைத் தினத்தில் நடத்தி வரும் 'அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்', 'பன்னிரு திருமுறைப் பாராயணம்' நாளை திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் தெற்கு கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள கற்பக விநாயகர் ஆலயத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (6)

# விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு

தென்மராட்சிப் பகுதி முன்பள்ளி ஆசிரி யர்களுக்கான விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதால் ஆசிரியர்கள் தமது சுயவிபரங்களை சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் நேரடியாக சமர்ப்பிக்குமாறு சங்க பொது முகாமையாளர் தா. பாலசுந்தரம் அறிவித்துள்ளார். (6-29)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா செல்வதயாபரன்



அளவெட்டி தெற்கு, நாக்கனாவத்தை, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வதயாபரன் 02.07.2009 வியாழக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், சாந்தினி (இந்தியா) , வசந்தா , றஞ்சினி (பிரான்ஸ்), ஜெயந்தி (இந்தியா), சுரபாஸ்கரன் (லண்டன்) , பத்மினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் , பன்னீர்ச்செல்வம் , சூரியகுமார், நவரத்தினராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாக்கனாவத்தை,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

தகவல்
து.பன்னீர்ச் செல்வம்.

## குமாரவேலு ஏகாம்பரம்



வேலணை கிழக்கு, அம்மன் கோவிலடியைச் பிறப்பிடமாகவும் 17 , சந்தனமாதா கோயில் வீதி, பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு ஏகாம்பரம் 03.07.2009 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு-தெய்வானை தம்பதியினரின் அன்பு மகனும் , கலாஞ்சென்றவர்களான ராசம்மா , கனகரெத்தினம், தனிநாயகம் , கமலாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.07.2009) நடை பெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17 ,சந்தனமாதா கோயில்வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

தகவல்
பெ.இராமநாதன்
ச.தெய்வேந்திரம் (மருமக்கள்)

## திருமதி நடேசு பராசக்தி



கொடிகாமம் , கோயிலாமனையைப் பிறப்பிடமாகவும் , அச்சுவேலி தெற்கு , அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடேசு பராசக்தி 03.07.2009 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் , பரமு நடேசுவின் அன்பு மனைவியும் , ஆறுமுகநாதனின் அன்புச் சகோதரியும் , லோகநாதன் , இரவீந்திரன் (அச்சுவேலி தபாலகம்), கௌசலா, லோகநாயகி, சிவலோகநாதன், பரலோகநாதன், கங்காதரன், பிரபாகரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் கலாரஞ்சினி, சசிகலா, செல்வநேசன், அகிலானந்தன், சயிலா, ஜெயசுதா, ருஷ்யந்தி, சுபர்ணா ஆகியோரின் அன்பு மாமியும், யசிக்கா , ஜெனார்த்தனன், மிதுசனா, யதுசனா , துஜிந்தன், ஜெயசுதன் , பிரதீப், ராகவி, ரஜீவ், சகானா, சாருஜன், சுருத்திகா, சுஜிக்கா , கிஷோர், பௌசன், மபிஷா, மபீனா, அகீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் , அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு.
அச்சுவேலி.

தகவல்
ந.இரவீந்திரன் (மகன்)
(தபாலகம் ,அச்சுவேலி)

# சிறுவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்

## பான் கீ மூன் கோரிக்கை

ஆயுதக்குழுக்களில் இருந்து விடுவிக்கப்பட்ட சிறுவர்களின் நலனையும் பாதுகாப்பையும் உறுதிப் படுத்து மாறு ஐ.நா செயலாளர் பான்கீ மூன் இலங்கை அரசாங்கத் தினை கோரியுள்ளார்.

முக்கியமாக ஆயுதக்குழுக் களில் இருந்து வெளியேறிய சிறுவர்களை அடையாளப்படுத்தல், விடுதலை மற்றும் புனர்வாழ்வு குறித்து உறுதிப்படுத்தி சர்வதேச தரத்திற்கு அமைவாக அவர்கள் சமூகத்தில் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆயுதக் குழுக்களின் பிடியிலிருந்த சகல சிறுவர் போராளிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பதனை உறுதிப்படுத்தவேண்டியது மிகவும் அவசியமானதெனவும்,

சிறுவர் போராளிகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைந்து வாழக் கூடிய பின்ணி உருவாக்கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குடும்பங்களிலிருந்து பிரிந்து வாழும் சிறுவர், சிறுமியரது நலன்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள அவர் சிறுவர் போராளிகளை பயன்படுத்தும் சகல தரப்பினருக்கும் எதிராக அரசாங்கம் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரியுள்ளார். (6)

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

வலி கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற் பகல் 9.30 மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்ராஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (6-4-134)




# இத்தாலியில் சட்ட விரோத குடியேற்ற வாசிகளுக்கு எதிரான புதிய சட்டமூலம் நிறைவேற்றம்

(கொழும்பு)

இத்தாலிய பாராளுமன்றமானது அந்நாட்டிலுள்ள சட்டவிரோத குடியேற்ற வாசிகளுக்கு தண்டனையளிக்கும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. கடந்த மே மாதம் அந்நாட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மேற்படி சட்ட மூலம் கடந்த வியாழக்கிழமை பாராளுமன்ற மேல் சபையான செனட் சபையிலும் நிறைவேற்றப்பட்டதையடுத்து சட்டமாக அமுலாக்கப்படும் அந்தஸ்தை பெற்றுள்ளது.

செனட் சபையின் 157 உறுப்பினர்கள் இந்த சட்ட மூலத்திற்கு ஆதரவாகவும் 124 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.

இந்த புதிய சட்டமானது சட்ட விரோத குடியேற்றவாசிகளுக்கு தண்டனையாக பெருந்தொகை தண்டப் பணம் விதிப்பதற்கும் சட்ட விரோத குடியேற்ற வாசிகளை தங்க வைத்திருப்பவர்களுக்கு மூன்று வருடத்துக்கு மேலான சிறைத் தண்டனை வழங்குவதற்கும் வழிவகை செய்கிறது.

அத்துடன் சட்டவிரோத குடியேற்றவாசிகளை தடுத்து வைப்பதற்கான காலமும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்படவுள்ளது.

அத்துடன் மேற்படி சட்ட அமுலாக்கத்திற்கு உதவி செய்யும் முகமாக ஆயுதம் ஏந்தாத பிரஜைகள், படையணிகள் செயற்படுவதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளமை பெரும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

இந்த புதிய சட்ட அமுலாக்கத்திற்கு மனித உரிமைக் குழுக்களும் வத்திக்கானும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் வலது சாரி குழுவொன்று மேற்படி சட்ட மூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து சீருடையணிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போவதாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இத்தாலிய உட்துறை அமைச்சர் ரொபேர்டோ மரோனி விபரிக்கையில்,

மேற்படி ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது என தெரிவித்தார்.

புதிய சட்ட விதிகளுக்கு அமைய சட்ட விரோத குடியேற்றவாசிகளுக்கு 4 ஆயிரத்து 276 ஸ்ரேலிங் பவுண் முதல் 8 ஆயிரத்து 553 ஸ்ரேலிங் பவுண் வரையான தண்டப் பணம் விதிக்கப்படவுள்ளது.

அத்துடன் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் சட்டபூர்வமான குடியிருப்பாளர்கள் என்பதை நிரூபிக்கும் வண்ணம் பிள்ளைகள் பிறக்கும் போது அவர்களுக்கான பிறப்புச் சான்றிதழ் ஆவணங்கள் தொடர்பில் பதிவு செய்வதையும் இந்த சட்டம் வலியுறுத்துகிறது. கடந்த வருடம் மட்டும் 36 ஆயிரத்துக்கும் அதிகமான சட்ட விரோத குடியேற்ற வாசிகள் இத்தாலியில் பிரவேசித்துள்ளதாகவும் இது அதற்கு முந்திய வருடத்தை விட 75 சதவீதம் அதிகமெனவும் கூறப்படுகிறது. (6)

# த.தே.கூட்டமைப்பினரை தனியாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி தீர்மானம்

(கொழும்பு)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனியாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான சர்வகட்சி குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் சார்பில் என் ஸ்ரீகாந்தா, ஜனாதிபதியிடம் தனியாகச் சந்தித்துப் பேசுவதற்கான சந்தர்ப்பம் ஒன்றை ஒதுக்கி தருமாறு கோரியிருந்தார்.

கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நீண்ட நேரம் தனியாக சந்தித்து உரையாடிய போதே ஸ்ரீகாந்தா இக்கோரிக்கை விடுத்திருந்தார்.

இக்கோரிக்கைக்கு இணங்கவே ஜனாதிபதி கூட்டமைப்பினரை விரைவில் தனியாக சந்தித்து கலந்துரையாடுவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சந்திப்பதற்கான திகதி இதுவரை நிர்ணயம் செய்யப்படவில்லை.

ஜனாதிபதியின் தீர்மானத்தின் பிரகாரம் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை அவர் இம்மாத முடிவிற்குள் சந்திப்பார் என்றும் அதற்கான அழைப்பு ஜனாதிபதியின் செயலாளர் ஊடாக விரைவில் அனுப்பப்படும் என்றும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (6)

# வணங்காமண் நிவாரணம் 8ஆம் திகதி கொழும்பு வரும்

(கொழும்பு)

ஐரோப்பிய மக்களால் வன்னி மக்களுக்காக அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி சென்னை துறைமுகத்திலிருந்து பிறிதொரு கப்பல் மூலம் கொழும்பை வந்தடையவுள்ளது.

வணங்காமண் கப்பலிலுள்ள பொருட்களை இறக்கும் பணி நேற்று முன்தினம் ஆரம்பித்து விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

இதனையடுத்து இக்கப்பலிலிருந்த பொருட்களை சென்னை துறை முகத்தில் வைத்து ஏற்றிக் கொண்டு இந்தியாவின் கொலரா எனும் கப்பல் நாளை திங்கட்கிழமை கொழும்பு நோக்கிப் புறப்படவுள்ளது.

பின்னர் 8 ஆம் திகதி அக்கப்பல் கொழும்பை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதைத் தொடர்ந்து ஐரோப்பிய மக்களால் அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (6)

# தேர்தல் கடமைகளுக்கான பயிற்சிகள் அடுத்த வாரம் ஆரம்பம்

(கொழும்பு)

யாழ். மாநகரசபை மற்றும் வவுனியா நகரசபைகளுக்கான தேர்தல் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி செயலமர்வுகள் அடுத்தவாரம் இடம்பெறவுள்ளதாக மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வாக்காளர்கள் பட்டியல்கள் தயாரிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதுடன் வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி அரம்பமாகுமென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரசபைத் தேர்தலுக்காக இம்முறை 500 அரச உத்தியோகத்தர்களும் யாழ். மாநகர சபைத் தேர்தலுக்கென இம்முறை ஆயிரம் அரச உத்தியோகத்தர்களும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

தேர்தல் தொடர்பான முன்னோடி நடவடிக்கைகளில் எவ்வித தங்கு தடையுமின்றி இடம்பெற்று வருவதாகவும் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் தெரிவித்துள்ளனர். (6)

# திருமலையில் சித்த வைத்திய போதனா வைத்தியசாலை அமைக்க சுதேச வைத்திய அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

திருகோணமலையில் சித்த வைத்திய போதனா வைத்திய சாலை ஒன்றை அமைக்க சுதேச வைத்திய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் செயல்முறைப் பயிற்சி நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாகவும் பிரதேச மக்களின் தேகாரோக்கியத்தை கருத்தில் கொண்டும் இந்த சித்த வைத்திய போதனா வைத்தியசாலை அமைக்கப்படுவதாக அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவை சுதேச வைத்திய அமைச்சர் திஸ்ஸ கரலியத்த நாளை திங்கட்கிழமை திறந்து வைப்பார் என சுதேச வைத்திய அமைச்சு அறிவித்துள்ளது. (6)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



### நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### இன்று சப்பறத் திருவிழா

### அபிராமியே எங்கள் அன்னையே

அலையாடும் கடலோரத் தலமிருந்தே – என்றும்
அடியார்க்கு அருள்பாலிக்கும் அபிராமியே
நிகரில்லா நிர்மல சுந்தரியே – நயினை
புகழோங்கும் திருக்கோயில் அபிராமியே
நடராசன் உடனாடும் தாரணியே – நாக
நளினமிடும் நாகபூஷணியே அபிராமியே
கடைக்கண்ணால் இன்னல்கள் தீர்த்தருள்வாய் – என்றும்
நாம் உம்மோடு என்றும் வாழ்ந்திட வரம் தருவாய்.

க. பிரியதர்சினி
நயினாதீவு

### நீயே கதி எமக்கருள் புரிவாய்

பூதலம் போற்றும் நயினைப் பதியில்
அலைகடல் மீதிலோர் அற்புதக் கோலமாய்
அருள்மாரி பொழியும் அன்னை சிவகாமி
நின்பதம் தொழுவோம் இன்னருள் புரிவாய்
இடர்தனைத் தருவோர் இருப்பினை அகற்றி
அடியவர் எங்கள் இடர்தனை களைவாய்
உன்னையல்லால் எமக்கோர் உறுதுணை உண்டோ
நீயே கதி எமக்கருள்புரிவாயே

இணுவை சுகந்தி

### அன்னைக்கு ஒரு புது பரணி

உன் புகழ் பாட
வார்த்தைகள் இல்லையம்மா
வடிவாம்பிகை தாயே
வரம் கோடி தந்திடம்மா
எத்தனையோ இழந்து வந்தோம்
கரம் ஏந்தி நிற்கிறோம்
சக்தியின் வீரத்திற்குரியவளே
கேட்கும் வரம் தந்திடம்மா
தீவகத்தில் எழுந்தருளியவளே
தீயவர்களை அழிப்பவளே
பக்த கோடி பெருமக்களுக்கு
வேண்டும் வரம் தந்திடம்மா
குழப்பங்களிலிருந்து மீண்டு வர
குலமகளே வரம் வேண்டும்
நாகாம்பிகை தாயே
நலம் வாழ வேண்டுகிறோம்
நோய்கள் பிணிகள் தீர்த்து வைக்கும்
நாகேஸ்வர ரூபமே
அனைத்தையும் தந்து
வாழ்வை உயர்த்திடம்மா


வே. அகிலேஸ்வரன்
குருநகர் நலன்புரி நிலையம்

### "நயினையை நாடினால்" நல்லருள் நலம் நல்குவாள்

தஞ்சமென நயினை பதியாளை நாம் நாடினால்
தரணி நல்லருள் நலம் நல்குவாள்
ரஞ்சனியே ராஜராஜேஸ்வரியே வேப்பிலைக்காரியே
ரகுபதி சோதரியே எனை ரட்சிப்பாயே
அன்னையே அகிலம் ஆளும் அகிலாண்டேஸ்வரியே
ஆனந்தியே நயினையின் நாகபூஷணியே
உன்னையே உருகி உளமார உருகுகின்றேன்
உன்னருள் வேண்டி துதி செய்கிறேன்

இ. டினேஸ்சன்
கோண்டாவில்.

## திரை விமர்சனம்



# நாடோடிகள்

கதாநாயகர் சசிகுமாரும், அவரது நட்பு வட்டமும் சிக்கலான காதலையும், காதலர்களையும் சேர்த்து வைக்க உயிரையும் கொடுக்கும் ஜாதியைச் சேர்ந்த ரகம்! அதேநேரம், தாங்கள் சேர்த்து வைத்த காதலர்கள் தங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு கலைந்தோ, பிரிந்தோ போனால் அவர்களது உயிரை எடுக்கவும் தயங்காதவர்கள் இந்த நண்பர்கள் என்பதை வித்தியாசமாகவும், விறுவிறுப்பாகவும் சொல்லி வந்திருக்கும் படம் தான் நாடோடிகள்...!

கதைப்படி, நாயகர் சசிகுமார், அவரது நண்பர்கள் விஜய் (சென்னை -28), பரணி மூவரும் ஜாலியான பேர்வழிகள். நாயகர் சசிக்குமாருக்கும், அவரது மாமன் மகள் அனன்யாவிற்கும் இடையில் காதல். ஆனால் சசி, வெட்டியாக சுற்றிக்கொண்டிருப்பது பிடிக்காமல் அவர் அரசாங்க வேலைக்குப் போனால் தான் தன் மகளைக் கல்யாணம் கட்டித் தருவேன் என கண்டிஷன் போடுகிறார் மாமா. இவர்களது காதல் ஒரு பக்கம் என்றால், மற்றொரு பக்கம் சசியின் நண்பர் விஜய்க்கும் சசியின் தங்கை அபிநயாவிற்கும் இடையில் காதல். இந்தக் காதலை எல்லாம் அப்படி அப்படியே விட்டு விட்டு தங்கள் நண்பரின் காதலுக்காக நாமக்கல் வரும் நண்பர்கள் கோஷ்டி, நண்பன் ரங்காவின் காதலியைக் கடத்தி காதலியின் அப்பாவான முக்கிய புள்ளி ஞானவேலுவுடன் மோதுகின்றனர். இவர்களது காதல் கரை சேர்ந்ததா? நண்பனின் காதல் கல்யாணத்தில் முடிந்ததா? அதன் பின் என்ன ஆனது? உள்ளிட்ட இன்னும் பல கேள்விகளுக்கு சினிமாத்தனம் இல்லாமல் சீரியஸாக பதில் சொல்கிறது நாடோடிகளின் மீதிக்கதை!



ஆரம்பக் காட்சிகளிலேயே நம்முடன் ஐக்கியமாகி விடும் சசிக்குமார், அடுத்தடுத்த காட்சிகளில் முன்னணி நடிகர்களின் வரிசையில் தன்னையும் அறியாமல் தாவி, தனக்கொரு இடம்பிடித்து விடுகிறார் என்றால் மிகையல்ல!

நாங்களும் அவருக்கு சற்றும் சளைத்தவர்கள் அல்ல...என கோயில் பட்டை சாதத்திற்காக தனது பாஸ்போர்ட் விண்ணப்பத்தை பறிகொடுத்து, பின் நண்பனின் நண்பனது காதையும் பறிகொடுக்கும் பரணியும் சரி, கம்ப்யூட்டர் சென்டர் வைக்கும் கனவுடன் நண்பனின் தங்கையை நண்பருக்குத் தெரிந்தும், தெரியாமலும் காதலித்து பின், நண்பனின் நண்பனது காதலுக்காக ஒரு காலை இழக்கும் விஜய்யும் சரி, சசிகுமார் மாதிரியே சபாஷ் வாங்கி விடுகின்றனர்.

சதா சர்வகாலமும் எதையாவது வாயில் போட்டு மென்றபடி திரியும் புதுமுக நாயகி அனன்யா, நடிப்பையும் அனாயாசமாக மென்று தின்று ஜெயித்திருக்கிறார். சசியின் தங்கையாகவும், விஜய்யின் காதலியாகவும் வலம் வரும் அபிநயா அனன்யாவையை சில இடங்களில் தூக்கி சாப்பிட்டு விடுகிறார். அம்மணி அபிநயா நிஜத்தில் வாய்பேச முடியாதவராம். நம்ப முடியவில்லை!!!

சுந்தர்.சி. பாபுவின் இசையும் பாடல்களும், கதிரின் ஒளிப்பதிவும் சமுத்திரகனியின் சவாலான கதைக்கும், இயக்கத்திற்கும் பக்கபலமாக நின்று படத்தை பல மடங்கு தூக்கி நிறுத்துகின்றன!


நாடோடிகள் திரையரங்கிலும், ரசிகர்கள் மன அரங்கிலும் வெற்றிகரமாக ஓடிட வேண்டி நம் முன்னோடிகள்.

**நாடோடிகள்: நாம் கடைப்பிடிக்க வேண்டியவர்கள் அல்ல... கண்டுகளிக்க வேண்டிய முன்னோடிகள்!!!**

# கின்னஸ் சாதனை செய்த தமிழ் படம்



கனடா வாழ் தமிழரான சுரேஷ் ஜோக்கிம் நடித்த ''சிவப்பு மழை'' படத்திற்கு கின்னஸ் நிறுவனத்தினர் சாதனை சான்றிதழை வழங்கிவிட்டார்களாம். ஏறக்குறைய இரண்டு மணித்தியாலம் வரை ஓடக்கூடிய திரைப் படத்தை பன்னிரண்டு தினத்துக்குள் படமாக்கப்பட்ட திரைப்படம் என்ற பிரிவில் இதற்கு சாதனை சான்றிதழைப் பெற்றிருக்கிறார்களாம். தமிழக முதல்வர் தலைமையில் ஒரு விழா எடுத்து, இப்படத்தினை உலகு முழுவதும் ஒரே தருணத்தில் வெளியிட திட்டமிட்டிருப்பதாகவும், முதல்வரின் திகதிக்காக தாங்கள் காத்திருப்பதாகவும் இப் படத்தின் தயாரிப்பாளரான சில்வெஸ்டர் ரத்தினம் தெரிவித் துள்ளார்.




பொய்ஸ் ஸ்டூடியோஸ் மற்றும் மாயாபஜார் சினிமாஸ் சார்பில் என்.சி.மணிகண்டன் தயாரித்திருக்கும் திரைப்படம் "புகைப்படம்", நந்தா, அம்ஜத், சிவம், ஹாரீஸ், டி.கே.மதன், யாமினி, மிருனாளினி, பிரியா, ஆனந்த், சண்முகசுந்தரம், நிலீமா உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குநராக அறிமுகமாகியிருக்கிறார் ராஜேஷ்லிங்கம். புகைப்படம் பற்றி அதன் இயக்குநர் கூறுகையில், கல்லூரி பருவ நட்பை வித்தியாசமான கோணத்தில் சொல்லும் ஒரு சிறு முயற்சி தான் புகைப்படம் என்றார். விஜய ஆம்ஸ்ட்ராங் ஒளிப்பதிவு செய்ய, கங்கை அமரன் இசையமைத்துள்ளார்.

# கமலின் இயக்கத்தில் நடிக்க ஆசை-நடிகர் ஜெய்




சுப்பிரமணியபுரம் படம் மூலம் பட்டிதொட்டியெங்கும் பிரபலமான நடிகர் ஜெய், தற்போது வாமணன், அதேநேரம், அவள் பெயர் தமிழரசி, அர்ஜுனன் காதலி, கோவா என பிஸியாக இருக்கிறார். அவர் நடித்துவரும் அனைத்துப் படங்களிலும் ஒன்றுக்கொன்று சம்பந்தமே இல்லாத வித்தியாசமான கேரக்டர்களாம்.


இப்படி வித்தியாசமான கேரக்டர்கள் வரிசைகட்டி வந்தாலும், ஜெய்க்கு ஒரு ஆசை இருக்கிறதாம். கமல்ஹாசன் இயக்கத்தில் ஒரு படத்திலாவது நடிக்கவேண்டும் என்பதுதான் அந்த ஆசையாம். இதுபற்றி தெரிவித்த ஜெய், கமல் நடித்த மைக்கேல் மதன காமராஜன் படத்தை ரீ-மேக் செய்தால் அதில் நடிக்கவேண்டும் என்பது தான் தனது ஆசை என்றும், ஆனால் அந்த ஆசை நிறைவேறுமா? என்று தெரியவில்லை என்றும் கூறினார்.

வாமணன் படம் குறித்துக் கூறுகையில், படத்தில் நான் சினிமா வாய்ப்புக்காக அலையும் இளைஞனாக நடிக்கிறேன் எத்தனையோ இளைஞர்கள் சினிமா வாய்ப்புக்காக ஏங்கி சென்னை நகரைச் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கை கஷ்டங்களை பிரதிபலிக்கும் வகையில் இந்த கேரக்டர் இருக்கும் என்கிறார் ஜெய்.

# கார்த்திகாவின் பயம்



தூத்துக்குடி கார்த்திகா மிகுந்த மகிழ்ச்சியில் இருக்கிறார். காரணம்...முதல்வர் கருணாநிதி கதை-வசனத்தில் நீதியின்றி நான் இல்லை படத்தில் நாயகியாக நடிப்பதுதான். ஒருபக்கம் கார்த்திகாவுக்கு இதில் பரம சந்தோஷம் என்றாலும், மற்றொரு பக்கம் சின்ன வருத்தமும் உண்டு! அது ஜெ. நந்தினி ஆர்ட்ஸ் தயாரிப்பில் இளவேனில் இயக்கத்தில் தெலுங்கு பிரபலம் உதய் கிரண் ஹீரோவாக நடிக்கும் இப்படத்தில் தான் மட்டும் நாயகி அல்ல...! மீராஜாஸ்மினும் ஒருநாயகி என்பதுதான் அந்த வருத்தத்திற்கான காரணம்.



# வால்மீகி

## திரை விமர்சனம்



**நட்சத்திரங்கள்: அகில், அஜய், படவா கோபி, மீராநந்தன், தேவிகா மற்றும் பலர்.**

**கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்: ஜி.அனந்தநாராயணன்**

வழக்கமான காதல் கதை. நாயகன் அகில் - பிக்பொக்கெட் திருடன். நாயகி மீரா நந்தன்-பாலர் பாடசாலையை நடத்தி வருபவர். மனநிலை தவறிய ஒருவரின் எதிர்பாராத செயலால் பாதிக்கப்படும் நாயகியைக் காப்பாற்றுகிறார். நாயகிக்கு நாயகன் மேல் காதல் வருகிறது. காதலிக்கிறாள். நாயகன் ஒரு பிக்பொக்கெட் திருடன் என்று தெரிய வந்தவுடன் அவரைத் திருத்த முயற்சிக்கிறார். அந்த முயற்சியில் வெற்றி கிடைத்ததா? இல்லையா? என்பதை சொல்வது தான் இப்படத்தின் திரைக்கதை.

நாயகனின் அறிமுகமும், காதலர்களின் அறிமுகத்திற்கும் அழகாக சிந்தித்த இயக்குநர், நாயகன் திருந்துவதற்கு இன்னும் சற்றுக் கூடுதலாக சிந்தித்திருக்கலாம். நாக்கில் பாம்பை கொத்தவைத்து போதையேற்றிக் கொள்வதில் இனி அதிகமானோர் ஈடுபடுவார்கள். ஒருவனை நல்லவன் என்று சொல்லிப் பாருங்கள்.... அவன் திருந்தி விடுவான் என்று சொல்வதெல்லாம் ஓவர்.

நாயகன் அகில் -நடிப்பதற்கு நிறைய வாய்ப்பிருந்தும், கதாபாத்திரத்தை சரியாக உள்வாங்காத காரணத்தால் தடுமாறுகிறார். ஒரு சில இடங்களில் சொதப்புகிறார். நாயகி- மீரா நந்தன். கதாபாத்திரத்திற்கு ஏற்ற தேர்வாகத் தெரியவில்லை. அவரின் முகத்தில் கருணை, காதலும் சரியாகப் பிரதிபலிக்கவில்லை. மனநிலை தவறியவராக வரும் படவா கோபி கதாபாத்திரம்-சினிமாத்தனமானது. அதனால் ஜொலிக்க முடியவில்லை. தேவிகா- முகத்தில் இளமை இருக்கிறது. நன்றாக நடிக்கவும் செய்திருக்கிறார்.

வாலி, இளையராஜா என்ற பெரிய ஜாம்பவான்களை நம்பி ஒப்படைத்துவிட்ட இயக்குநர், தன்னுடைய தேவையைக் கேட்டுப் பெறாததால் பாடல்களும், பின்னணியிசையும் படத்திற்கு வலு சேர்க்கவில்லை. உழைத்துச் சாப்பிட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியதற்காக அடுத்த ஆண்டு சிறந்த கருத்துள்ள படமாக இந்தப் படம் தேர்வாகலாம். வால்மீகி -புராணம்.




# Lifeline
# மீண்டும் வாழ்வோம்
இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

## இடம்பெயர்ந்த குடும்பங்களின் மீளிணைப்பும் வயோதிபர்கள் விடுவிப்பும்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார் ஆகிய பிரதேசங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களில் வயோதிபர்களும் உள்ளடங்குவர். இவர்களில் வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து ஆயிரத்து 868 பேரும் யாழ்ப்பாணம் நலன்புரி நிலையங்களில் இருந்து 43 பேரும் மன்னர் நலன்புரி நிலையங்களில் இருந்து 5 பேரும் தத்தமது குடும்பங்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர். அல்லது வயோதிபர் இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர் என அண்மையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மனிதாபிமான விடயங்களுக்கான ஒருங்கிணைப்புக் காரியாலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியே சென்று வாழ்வதற்கு அனுமதி பெற்ற ஆயிரத்து 916 பேரில் வயோதிபர்களும் உள்ளடங்குவர்.



இவ் விடயம் குறித்து சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி பிரதியமைச்சர் லயனல் பிரேமசிறி கருத்துத் தெரிவிக்கையில், நலன்புரி நிலையங்களில் வாழ்கின்ற வயோதிபர்கள் சம்பந்தமான தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன. சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரியின் கீழ் இயங்குகின்ற பணியாளர்கள் விண்ணப்ப படிவமொன்றைத் தயாரித்துள்ளனர்.

அதில் குறிப்பிடப்படும் தகவல்கள் சரியானவையா என்று ஆராய்வோம். அதன் பின்னர் அவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருப்பின் அவர்களை நலன்புரி நிலையங்களை விட்டு வெளியே சென்று வாழ்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. இதே வேளை அவர்களிடம் உள்ள சொத்துக்களுக்காகவோ அல்லது வேறு ஏதாவது நலன்களுக்காகவோ அழைத்துச் செல்ல முற்பட்டாலும் அவர்களை அனுப்பமாட்டோம். இந்நிலையில் பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் இல்லாத 500 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். நலன்புரி நிலையங்களில் உள்ள வயோதிபர்களில் உறவினர்கள் எவரும் இல்லாதவர்களும் உள்ளனர். அவர்கள் வயோதிபர் இல்லங்களில் தங்கவைக்கப்படவுள்ளனர். அரசாங்கம் மன்னாரில் வயோதிபர் இல்லமொன்றை அமைத்து வருகின்றது.

இதைத் தவிர மற்றுமொரு வயோதிபர் இல்லமொன்றையும் அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. மன்னாரில் அமைக்கப்படுகின்ற வயோதிபர் இல்லத்திற்கு நுளம்பு வலைகள், கட்டில்கள், தலையணைகள், படுக்கை விரிப்புக்கள், பாத்திரங்கள் ஆகிய வற்றை கொடுத்து உதவலாம்.

மேலும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் வயோதிபர்கள் சிறந்த முறையில் கவனிக்கப்படுகின்றனரா என்பது பற்றிச் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு தொடர்ந்தும் கண்காணித்து வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சமூக சேவைகள் மற் றும் சமூக நலன்புரி அமைச்சானது சில உளவளத் துணையாளர்களைப் பல நலன்புரி நிலையங்களுக்கு அனுப்பியுள்ளது. இவர்கள் அங்கு தங்கியுள்ள மக்களுடன் உரையாடி அவர்களுக்குத் தேவையான உளவளத் துணை ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். இந்நிலையில் 60 வயதிற்கும் மேற்பட்ட 9 ஆயிரத்து 247 முதியவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (21-06.2009) சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்களது பெயர் விபரங்கள் விரைவில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மீண்டும் வாழ்வோம்

''மீண்டும் வாழ் வோம்'' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள் குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்து பட்ட மனிதாபிமான செயற்றிட்ட அமைப் புக்களின் ஓர் அங்கமாகும்.

## “சிறுவர்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்”

### ஷேட் நிறுவனத்தின் பதில் பணிப்பாளர் நிர்மலாதேவி கிருஸ்ணகோபால்

வவுனியா நலன்புரி நிலையங்களில் வாழுகின்ற சிறுவர்கள் மத்தியில் உளவியல் ரீதியான தாக்கங்கள் காணப்படுவதனால் இவற்றிலிருந்து சிறுவர்கள் மீள்வதற்காக பல்வேறு நிறுவனங்கள் ஆற்றுப்படுத்தல் திட்டங்களை அங்கு முன்னெடுத்து வருகின்றன. அந்தவகையில் வவுனியாவில் இயங்கிவரும் உள்ளூர் அரச சார்பற்ற ஷேட்(SHADE) நிறுவனம் சிறுவர்களுக்கான மகிழ்வூட்டல் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. இது தொடர்பான மேலதிக விபரங்களை அந் நிறுவனத்தின் பதில் பணிப்பாளர் நிர்மலாதேவி கிருஸ்ணகோபால் தெரிவித்தார். அதன் விபரம் வருமாறு,

**வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் வாழ்கின்ற மக்களுக்கு எவ்வாறான பணிகளை முன்னெடுத்து வருகின்றீர்கள்?**

எங்களுடைய நிறுவனமானது உள சமூக நிகழ்ச்சித் திட்டங்களை வவுனியா மாவட்டத்தில் கடந்த 5 வருடங்களாக மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் வாழும் மக்களுக்காக உள சமூகப் பணியினை நேரடியாக வழங்காவிட்டாலும் கூட சிறுவர்களுக்கான உளவியல் சம்பந்தப்பட்ட பணியினை ஆரம்பித்துள்ளோம். சிறுவர் இல்ல செயற்பாடுகளை மேற்கொள்வதன் ஊடாக அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்குமான செயற்திட்டங்களை வகுத்துள்ளோம்.



வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் உள்ள இடம்பெயர்ந்த சிறுவர்கள்

**இடைத்தங்கல் முகாம்களில் வாழும் சிறுவர்களை மையப்படுத்தி உங்களுடைய திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றமைக்கான காரணங்கள் எவை?**

சிறுவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளதுடன் எதிர்காலத்தில் பல சவால்களை சந்திக்க வேண்டிய சூழ்நிலைகளும் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் வாழும் சிறுவர்களுக்கு சிறுவர் இல்ல செயற்பாடுகள் அல்லது விளையாட்டு செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட நிலையிலிருந்து விடுபடுவதற்கும் அவர்களது குடும்பத்தினருடன் மற்றும் உறவினர்களுடன் இணைந்து தங்களுடைய வாழ்க்கை முறையை கொண்டு செல்வதற்கும் ஒரு நல்ல வழிகாட்டல் அவசியமாகும்.

குறிப்பாக அவர்களுடைய ஆற்றல், திறன்கள் குறைவடைந்து போகாமல் விடுவதற்கும் அவர்களுடைய பழைய நிலையிலிருந்து புதிய வாழ்க்கை சூழலை தேர்ந்தெடுப்பதற்கும் மகிழச்சிகரமான வாழ்க்கையை ஏற்படுத்தி கொள்வதற்கும் இவ்வாறான செயற்பாடுகள் அவசியமாகும்.

**சிறுவர் இல்லங்களினூடாக எவ்வாறான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றீர்கள்?**

கற்றல் செயற்பாடுகளில் மந்த கதியில் காணப்படுவது, பாடசாலை செல்லாமல் விடுவது, பாடசாலைக்கு செல்ல ஆர்வம் இல்லாமல் இருப்பது, தங்களுடைய நிலையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாமல் இருந்த அதிகமான சிறுவர்கள் மத்தியில் தற்போது பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே தங்களுடைய பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்ளவும். உடல் தூய்மையைப் பேணவும் ஒரு நல்ல வாய்ப்பாக எங்களுடைய திட்டம் காணப்படுகிறது.

இதேவேளை சிறுவர் இல்லங்களுக்காக 17 வகையான விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளோம். ஓய்வான நேரங்களில் விளையாட்டு, கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கும் அதனூடாகத் தங்களுடைய பிரச்சினைகளைக் கையாள்வதற்கான தீர்வுகளையும் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இவர்களுக்குள் மறைந்திருக்கும் ஆற்றல்கள் வெளியில் கொண்டு வருவதற்கு சில போட்டிகளையும் நடத்துகின்றோம். அதனூடாக அவர்கள் சுமூகமான நிலைக்கு வருவதை அவதானிக்க முடிகின்றது.

**நலன்புரி நிலையங்களில் வாழும் சிறுவர்களுக்குத் தற்போது உடல் உள ரீதியாக எவ்வாறான தேவைகள் உள்ளன?**

போஷாக்கான உணவினை வழங்குதல் அத்தியாவசித் தேவையாகத் தற்போது காணப்படுகின்றது. அதிகளவிலான சிறுவர்கள் இருக்குமிடத்தில் போஷாக்கான உணவுகள் வழங்கப்பட்டாலும் கூட அதற்கான தேவை அதிகமாகவே காணப்படுகின்றது. சிறுவர் இல்ல மற்றும் விளையாட்டு செயற்பாடுகளும் சிறுவர் நட்புறவு மையங்களும் அனைத்து நலன்புரி நிலையங்களிலும் உருவாக்கப்பட வேண்டும் என்பதுடன் அதனூடாக அவர்களுடைய வேதனைகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் தங்களுக்கென பாதுகாப்பான சூழலை உருவாக்கிக்கொள்வதற்குமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

## வவுனியா முகாம்களில் முன்னெடுக்கப்படும் சுகாதார நடவடிக்கைகள்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களுக்கான உதவிகளை அரசும் பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்களும் சமய அமைப்புகளும் வழங்கி வருகின்றன. அந்த வகையில் சர்வோதய நிறுவனம் பாரிய பணியை முன்னெடுத்து வருகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.



வவுனியா மெனிக்பாமில் அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள இடம்பெயர்ந்த மக்கள்

எந்தவொரு இடத்தில் மக்கள் வசிப்பதாக இருந்தாலும் அடிப்படைத் தேவைகள் இன்றியமையாதது. அதேபோன்று சுகாதாரத் தேவைகளும் தவிர்க்க முடியாதது. சர்வோதய நிறுவனம் சுகாதாரம் சம்பந்தமான பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இதே வேளை குடிநீர் வசதிகளையும் வழங்கி வருகிறது.

வவுனியா மெனிக்பாம் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரணக் கிராமங்களான 1,2,3,4,5 ஆகிய வலயங்களிலும் வவுனியா நகரில் அமைக்கப்பட்டுள்ள 5 தற்காலிக முகாம்களிலுமாக இரண்டு பகுதிகளில் சர்வோதய நிறுவனம் பணிபுரிந்து வருகின்றது. இந்த இரண்டு பகுதிகளிலும் தண்ணீர் மற்றும் சுகாதாரம் தொடர்பாக பணிகளை முன்னெடுத்துவரும் சர்வோதய நிறுவனம், தற்போதைக்கு மெனிக்பாம் 1,2,3,4 பகுதிகளில் 645 மலசலகூடங்களை அமைத்து கொடுத்துள்ளது. அத்தோடு அங்கு வசிக்கும் மக்களுக்கு குளிப்பதற்காக 10 இடங்களில் தண்ணீர்த் தாங்கிகளை நிறுவி மறைவிடங்களை அமைத்துக் கொடுத்துள்ளது. இதுதவிர அவர்களது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 150 தாங்கிகளில் தண்ணீரை நிறைத்து வழங்கி வருகிறது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கும் தண்ணீரை சுத்திகரிப்பதற்காக ஒக்ஸ்பாம் நிறுவனம் சுமார் அரை ஏக்கர் நிலப்பரப்பில் பல்வேறு இயந்திரங்களைப் பொருத்தி வழங்கியுள்ளது. அதன் மூலமாக துப்புரவு செய்து தினமும் சமார் ஐம்பதாயிரம் லீற்றர் தண்ணீர் தாங்கிகளில் சேகரிக்கப்பட்டு வழங்கி வருகிறது. எனவே இந்தத் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்ட தூய்மையான தண்ணீர் என்பதை நூறு வீதம் உறுதிப்படுத்த முடியும் என சர்வோதய நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் குணவர்தன சுபசேன த சில்வா தெரிவித்தார்.

இதேவேளை சர்வோதய நிறுவனத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள மலசல கூடங்களை துப்புரவு செய்யும் பணிகளையும் அவர்களது மேற்பார்வையிலேயே செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மலசலகூட தூய்மை தொடர்பாக சுபசேன த சில்வா தெரிவிக்கையில், தாம் கலி எனப்படும் வாகனத்தைப் பயன்படுத்தி மலசல கூட குழிகளில் நிறைந்துள்ள கழிவை அகற்றி வருவதாகவும் அது தவிர தமது தொண்டுப் பணியாளர்கள் 300 பேர் அங்கு கடமையில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர்கள் குளோரின் மற்றும் கிருமி நாசினிகள் என்பனவற்றைப் பயன்படுத்தி துப்புரவு பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். அத்தோடு முகாம்களில் வாழும் மக்களுக்கேற்ப மலசல கூட வசதிகள் சில இடங்களில் காணப்படவில்லை. இதுவொரு பிரச்சினையாக காணப்படுகிறது என்றார்.

மக்கள் செறிந்து வாழும் பகுதியில் சுற்றுப் புறச் சூழலை தூய்மையாக வைத்திருக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும். எனவே நிவாரணக் கிராமங்களில் வாழும் மக்களுக்கும் இதுகுறித்து விழிப்புணர்வை சர்வோதய நிறுவனம் ஏற்படுத்தி வருகிறது. சமையலறை மற்றும் அவர்களது கொட்டில்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை சேர்ப்பதற்காக பெரிய பொலித்தீன் பைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை வவுனியா நகரசபையினர் எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இதுதவிர அந்த மக்களுக்கு அவர்களது தனிப்பட்ட சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சர்வோதய நிறுவன தொண்டர்கள் பல்வேறு ஆலோசனைகளை வழங்குகின்றனர்.

**உங்கள்எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்**

மீண்டும் வாழ்வோம்

தொடர்பான உங்கள் மேலான எண்ணங்களையும் படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம்
நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில் உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள்
அவற்றை மீண்டும் வாழ்வோம் பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல.1039 கொழும்பு
தொ.பே. -0774952242
மின்னஞ்சல்-info@lifeline srilanka.com



''மீண்டும் வாழ்வோம்'' நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலி யூடாக தினமும் இரவு 9.00 மணி முதல் 10.00 மணி வரையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தேசிய சேவையில் திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9.30 மணிமுதல் 9.45 மணி வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW. Internews. lk) என்ற இணையத்தளத்திலும் தரவிறக்கம் செய்யலாம்.

# தன்னிலை இழந்த அரசியல் தலைமை

இலங்கையில் முகாம்களில் வாடும் தமிழரின் நிலை குறித்தும், அவர்களுக்கு நிவாரணப்பொருட்கள் கிடைக்கச் செய்வது குறித்தும் , அவர்களின் அரசியல்



உரிமை குறித்தும் விவாதிக்க தமிழக சட்டப்பேரவையில் கொண்டுவரப்பட்ட சிறப்பு கவனயீர்ப்புத் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்திற்கு முதலமைச்சர் கருணாநிதி அளித்துள்ள விரிவான பதில் தமிழனின் அரசியல் தலைமை எந்த அளவிற்கு தடமாறிப்போய்விட்டது என்பதற்கு சான்றாகும்.

ஈழத்தமிழரின் பிரச்சினை (தான் ஆட்சியில் இருக்கும் போது) அரசியல் பிரச்சினையாவதையோ அல்லது தேர் தல் பிரச்சினையாவதையோ தி.மு.க. தலைவரும் தமிழக முதல்வருமான கருணாநிதி விரும்புவதில்லை என்பது தமிழ் நாட்டு மக்களுக்கு தெரிந்த உண்மை யாகும்.

அதனால் தான் இந்த சட்டப்பேரவை கூட்டத்தொடர் ஆரம்பமாகியதும் இலங்கையில் இறுதிக் கட்டப்போரில் அப்பாவித் தமிழர்கள் 50 ஆயிரத்திற்கு மேல் கொல்லப்பட்டவர்கள் குறித்து கேள்விநேரத்தை ஒத்திவைத்துவிட்டு விவாதிக்க வேண்டும் என்று முக்கிய எதிர்க்கட்சியான அகில இந்தியா அ.தி. மு.கவும், ம.தி.மு.க. வும் ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டுவந்த போது அதனை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமல் வெளி நடப்புக்கு வழி செய்தது ஆளும் கட்சி .

மறுநாள் அவர்கள் அப் பிரச்சி னையை அவையில் பேசிய போதும் அதனைப் பெரிதுபடுத்தாமல் பதிலளித்து நீர்க்கச்செய்தது ஆளும் கட்சி . ஏனென்றால் இந்தியாவின் நாடாளுமன்றத்திற்கு நடந்த தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்ட 16ஆம் திகதி மதியம் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி மத்தியில் ஆட்சி அமைக்கும் பலம்பெற்றதற்கு பின்னரே ஈழத்தில் தமிழர்கள் மீதான தாக்குதல் கடுமையானது.

அத்தாக்குதலின் உச்சக்கட்டமாக மே 18ஆம் திகதி (திங்கட்கிழமை) பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட முள்ளிவாய்க்கால் , வட்டுவாகல் ஆகிய இரண்டு கிராமங்க ளில் இருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

மறுநாள் போர் முடிந்ததை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித் தார்.

இறுதிக்கட்டப்போரில் பல பல்லா யிரக்கணக்காண மக்கள் கொல்லப்பட்ட விபரம் அறிந்த உலக நாடுகள் இலங்கை அரசைக்கண்டித்தன. மக் கள் வாழ்ந்த தடமே அங்கு இல்லை, அந்த இடமே அச்சமூட்டுவதாக இருந்தது என்று ஹெலிகொப்டரில்சென்று பார் வையிட்ட ஐ.நா. பொதுச்செயலரின் முதன்மை அலுவலர் விஜய் நம்பியாரும் பின்னர் பொதுச்செயலர் பான் கீ மூனும் கூறினர்.

அது குறித்து சர்வதேச குழுவை அனுப்பி விசாரிக்க வேண்டும் என்று பான் கீ மூனும் மற்ற உலக நாடுகளும் ஜனாதிபதி ராஜபக்ஷவை வற் புறுத்தின.

ஆனால் தாய்த்தமிழக்கதில் முதல்வராக இருக்கும் மு.கருணாநிதி இது குறித்து சற்றும் அறியாதவராய் டில்லியில் முகாம் அடித்து தனது கட்சிக்கு (குடும்பத்திற்கு) மத்திய அமைச்சர் பதவிகளைப் பெறுவதற்கான தீவிரமுயற்சி யில் ஈடுபட்டிருந்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப் பட்டது குறித்து அந்தத் தொப்புள் கொடி உறவுகள் ஆறே முக் கால் கோடி பேர்'வாழும் தமிழ் நாட்டின் முதலமைச்சர் கவலைப்படாதவராகவே இருந்தார். அது குறித்து இன்று வரை அவர் பேச வில்லை.

ஒரு பிரச்சினை குறித்து பேசாமால் இருந்தலே அது செத்துவிடும் என்பதை அறியாதவரா அனுபவமிக்க நமது அரசி யல் தலைவர்? அதனால் தான் அமெ ரிக்க, ஐரோப்பிய நாடுகள் அந்த மாபெரும் படுகொலை குறித்து வற்புறுத்தி வரும் நிலையிலும் இன்று வரை கருணாநிதி அப்படி ஒன்று நடந்ததாகவே காட்டிக்கொள்ளாமல் மௌனம் சாதிக்கிறார் என்றால் எப்படிப்பட்ட அரசியல் சாதுரியம்.

**உறுப்பினர்களின் பேச்சும் முதல்வர் அளித்த பதிலும் !**

ஆடு, மாடுகளைக்கூட வேலி போட்டு அடைத்து வைப்பதில்லை. ஆனால் அங்கே மனிதர்களை முள் வேலி போட்டு அடைத்து வைத்திருக்கிறார்கள். பக்கத்தில் இருந்தும் உதவி செய்ய முடி யாதவர்களாக கைகள் கட்டப்பட்டுள் ளோம் என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பன்னீர்ச்செல்வம் பேசுகிறார்.

போர் முடிந்த பின்னும் எஞ்சியுள்ள தமிழர்கள் படும் சிரமங்களை பார்க்கும் போது கண்கள் குளமாகின்றன. 3 இலட் சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கட்டாந் தரையில் பாதுகாப்பற்ற நிலையில் வாழ்கின்றனர். தமிழர்களுக்கு சம உரி மையும் வாழ்வையும் பெற்றுத் தர வேண்டும். அவர்கள் எங்கு வாழ்ந் தார்களோ அதே இடங்களில் மீண்டும் குடியமர்த்த வேண்டும். இலங்கையில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் சிங்கள வர்களைக் குடியமர்த்த கூடாது என்று காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவை கொறடா பீற்றர் அல்போன்ஸ் பேசுகிறார்.

முகாம்களில் உள்ள இளைஞர்கள் கடத்தி கொலை செய்யப்படுகின்றனர். இளம் பெண்களை கடத்திச் சென்று கற்பழிப்பதாகவும் தகவல்கள் வரு கின்றன. இன்றுள்ள நிலையில் குறைந்த பட்ச சுயாட்சி உரிமையை பெற்றுத் தர வேண்டும் என்று பா.ம.க சட்டப் பேரவைக் கூட்சித் தலைவர் கோ. க.மணி பேசுகிறார்.

உயிரோடு மிச்சமிருக்கும் தமிழர் களையாவது பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மீதமிருக்கின்ற தமிழர்களாவது மானத்தோடு வாழ வேண்டும். பாதிக்கப்பட்டுக் கிடக்கும் அவர்களுக்கு உரிய நிவாரணம் சென்று சேர வேண்டும் என்று இந்திய கம்யூ னிஸ்ட் உறுப்பினர் இராமசாமி பேசுகிறார்.

இந்த கேள்விகளுக்கெல்லாம் நேரடி யான எந்தப் பதிலும் தெரிவிக்காமல் அங் குள்ள தமிழ் மக்களுக்கு செய்ய வேண்டிய உதவிகளை சிங்கள அரசுதான் செய்ய முடியும் என் பதை புரிந்து கொள்ள வேண்டும். இந்திய அரசு இது குறித்து வற் புறுத்தத்தான் முடியும் என்று முதல்வர் கருணாநிதி பதில் கூறுகிறார்.

தமிழ்நாட்டின் முதலமைச் சரின் பதிலை ஏதோ இவர் அடிப் படை இன்றி அளித்த பதிலாக புரிந்துகொண்டால் ஏமாந்து விடுவோம். இந்த தலைவர் பயன்படுத்திய இதே வார்த் தையைத்தான் வெளியுறவுச் செயலரான சிவ்சங்கர் மேனன் கொழும்பிலும் பின்னர் டெல்லி யிலும் கூறினார்.

என்ன செய்ய வேண்டும் என் பதை இலங்கை அரசிற்கு நாங் கள் எதையும் சொல்லப் போவதில்லை. அவர்களின் நாடு அதைச் செய், இதைச் செய் என்று நாங்கள் எதையும் அவர்களிடம் கூறிட முடியாது என்று கூறினார். இதைத்தான் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசில் பங்கு பெற்றிருக்கும் தி.மு.க-வின் தலை வரான கருணாநிதி தமிழக சட்டப் பேரவையில் பதிலாக கூறியுள்ளார்!

நாம் எதையாவது பேசி சிங்களவர்க ளின் கோபத்தை கிளறிவிடக் கூடாது என்றும் ஆலோசனை கூறியுள்ளார் தமி ழக முதல்வர்!

இங்கு நாம் வீராவேசமாகப் பேசலாம். சூறாவளிப் பேச்சு, புயல் வேகப் பேச்சு என்று பேசி அதற்காக புகழாரம் சூட்டலாம். தமிழ் மக்களைக் காப்பாற்ற அது உதவாது. மாறாக சிங்களவர்களின் கோபத்தைத்தான் அது அதிகரிக்கும் என்று தமிழினத் தலைவர் என்று அழைக்கப்படும் திரா விட இயக்கத்தின் அரசியல் கட்சியின் தலைவராக உள்ள முதல்வர் கருணாநிதி ஆலோசனை கூறியுள்ளார்.

திராவிட இயக்கத்தின் முதுபெரும் தலைவரும் பெரியார், அண்ணா வழியில் இயக்கத்தையும் அரசிய லையும் நடத்திய தி.மு.க தலைவரும் தமிழக முதல்வருமான கலைஞர் மு.கருணாநிதியிடம் நாம் முன்வைக்கும் கேள்விகள் இதுதான்.

- தமிழர்கள் தங்களுக்கு அரசியலமைப்பு ரீதியாக சம உரிமை கோரி சாத்வீக வழியில்தானே போராட்டத்தை ஆரம்பித்தனர்? அதற்கே சிங்களவனுக்கு கோபம் வந்ததே? அதனால்தானே ஈழத் தந்தை செல்வாவையும் அவருடன் நாடா ளுமன்றத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்த மற்ற தலைவர்களையும் சிங்கள பொலிஸாரும், சிங்கள காடையர்களும் அடித்து உதைத்தனர்? அப்படியானால் அவர்களுக்கு கோபம் வரும் வகையில் போராடியது செல்வா செய்த தவறா?

- செல்வாவின் போராட்டத்தையே ஒடுக்கியதால்தானே பின்னாளில் ஆயுத போராட்டம் உருவானது? அதனால் சிங்களவர்களுக்கு ஏற்பட்ட கோபம்தானே 1983 இல் வெடித்த இனப் படுகொலை? குட்டிமணி, ஜெகன் , தங்கத்துரை கொல்லப்பட்டது சிங்களவர்கள் கோபமுற்றதால்தானே? அவர்களிடம் ஏன் இந்த ஆலோச னையை அன்றே சொல்லவில்லை?

- கால் நூற்றாண்டிற்கும் மேலாக நடந்த அயுதப் போராட்டத்தை ஆதரித் தது மட்டுமன்றி உங்களது பிறந்த நாளில் வசூலான பணத்தை எல்லாம் ஆயுதமேந்திய இயக்கங்களுக்கும் தலா ரூ 50000 வீதம் பிரித்துக் கொடுத்தீரே அதுஎதற்காக?

**கச்சத் தீவிற்கும் இது பொருந்துமா?**

இதற்கெல்லாம் உங்களிடம் பதில் இருக்காது என்பது தெரியும். ஆட்சியில் இருந்தால் ஒரு பேச்சு, எதிர்க்கட்சியா னால் வேறு பேச்சு என்பது உங்களை அறிந்த தொண்டர்களுக்கே தெரியும். ஆயினும் நமது மற்றொரு கேள்வி இதுதான்.

கச்சத்தீவை மீட்க அரசியல் வேறு பாடுகளை மறந்து நாம் எல்லோரும் சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என்று கூறினீர்களே? இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கச்சத்தீவை நாம் மீண்டும் கேட்டால் சிங்களவர்க ளுக்கு கோபம் வராதா? அங்கே சென்று மீன் பிடித்தாலே சுடுகிறார்களே சிங்க ளவர்? அந்தத்தீவை திருப்பிக் கொடுங் கள் என்ற கேட்டால் அவர்களுக்கு எவ்வளவு கோபம் வரும்? அதனால் நமது மீனவர்கள் பாதிக்கப்படுவார்களே? என்ன செய்வீர்கள்?

தமிழ் மீனவர்கள் பாதிக்கப்படாமல் பாதுகாக்க கச்சதீவும் வேண்டாம். அந்த கடற்பரப்பில் நாம் சென்று மீன் பிடிக் கவும் வேண்டாம் என்று கூறுவீர்களா முதல்வர் அவர்களே?


இதேபோல முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சனையிலும் கேரள அரசிற்கும் அதன் தலைவர்களுக்கும் அடிக்கடி கோபம் வருகிறதே , அந்த அணையை இடித்து விட ஒப்புக் கொள்வீர்களா?

பாலாற்றுப் பிரச்சினையிலும் உங்களின் அரசு இந்தப் புதிய பாதையில் சென்றுதான் தீர்வு காணுமா?

ஆனால் அங்கே தமிழர்களுக்கு மாநில சுயாட்சியாவது கிடைக்க வேண்டும் என்று விரும்புகிற நீங்கள் , அதே கோரிக்கையை சமீபத்தில் எழுப்பினீர்கள். அது சோனியாவை கோபப்படுத்தினால் விட்டுவிடுவீர்களா? இதெற்கெல்லாம் நீங்கள் பதில் கூற வேண்டும். அப்போதுதான் உங்ளிடம் எதை எதிர்ப்பார்க்கலாம் என்பது தமிழக மக்களுக்குப் புரியும்.

**பெரியார் காட்டிய வழியா இது?**

ஆட்சியும் அதிகாரமும் பதவியும் ஒரு



மனிதனை மாற்றும் என்று கூறு வார்கள். ஆனால் அது ஒரு தலைவனை இந்த அளவிற்கு மாற்றும் என்று இன்றுதான் தெரிகிறது.

சுயமரியாதை இயக்கம் கண்ட பெரி யார் தமிழரின் உரிமைக்காக, சமூக அர சியல் தளங்களில் கடுமையாக போரா டினார். அதன் விளைவாகவே இந்தியா வின் அரசமைப்புச் சட்டம் முதல் முறை யாகத் திருத்தப்பட்டு இட ஒதுக்கீட்டிற்கு வழி காணப்பட்டது. தமிழரின் மொழிக்குஉரிய இடம் கிடைத்தது.

மானமும் அறிவும் மாந்தரின் அடையாளம் என்றார் பெரியார் . அப்படியே நின்றார் போராடினார் , வெற்றியும் பெற்றார். ஆனால் அவர் வழி வந்த அரசியல் தலைவர்கள் அனைவரும்-

**தமிழகத்தில் இருந்து தமிழன்**

விதிவிலக்கில்லாமல் அனைவரும் - பெரி யார் ஊட்டிய அறி வையும் தமிழரின் மானத் தையும் அடகு வைத்துவிட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனை சிங்கள வர்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். அதனால் தான் கூறினார்கள் தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்கள் கோமாளிகள் என்று.

# அழகான ஆடையும் அளவான உணவும் அனைவருக்கும் தேவை

பெண்களாகட்டும் ஆண்களாகட்டும் சீராக , சுத்தமாக , பொருத்தமாக உடையணிந்து வயதிற்கேற்ற அலங்காரத்துடன் மலர்ந்த முகத்துடன் பளிச்சென்று தங்களைக் கம்பீரமாகக் காட்டிக் கொள்பவர்களே பலரையும் தங்கள் பால் ஈர்ப்பவர்களாய் இருக்கிறார்கள். இது உலகறிந்த உண்மை. இவர்களைச் சுற்றி உருவாகும் நேர்மறை அதிர் வலைகளும் ஓர் ஒளிவட்டமுமே இந்த ஈர்ப்புத் தன்மைக்குக் காரணமாயுள்ளன.


நமது உடலையும், மனதையும் சுத்தமாக ஆரோக்கியமாக வைத்துக்கொண்டு, நமது உடல்வாகிற்கும், வயதுக்கும் நாமிருக்கும் சூழலுக்கும் நமது வேலைக்கும் ஏற்ப உடை அணிவதிலும், அலங்காரம் செய்து கொள்வதிலும் சம நிலையோடு இருப்பவர்களுக்கு சிறப்பான அங்கீகாரம் கிடைக்கிறது.

நமது ஆளுமையை நல்ல முறையில் வெளிப்படுத்த உதவும் சில டிப்ஸ் என்னவென்ற பார்ப்போமா?

நமது உடல்வாகு கொஞ்சம் பூசினாற் போல் சதைப் பிடிப்புடன் இருப்பது அதிர்ஷ்டம். ரொம்ப ஒல்லியாக கன்னத்தில் குழி விழுந்து கழுத்தெலும்பு வெளியே தெரிவது போல் இருப்பது துரதிருஷ்டம்.

நமது முக அமைப்பிலும் பொலிவிலும் கூட அதிர்ஷ்டம் இருக்கிறது. கனனக்கதுப்பு முழுமையாக அமைந்த வட்டமான உருண்டையான முகவாகு சதைப்பிடிப்பான ஓவல் ஷேப் முகம், செழிப்பான சிவந்த அதரங்கள், சதைப்பிடிப்பான மூக்கு,நிறைவான அழகான நெற்றி, மிகவும் அடர்த்தியில்லாத புருவம்,சரியாக வளைந்த தாடை, இரண்டு கண்களுக்கும் இடையில் சரியான இடைவெளி, குறைபாடுகளற்ற (பரு,மரு,வடு,கரும்புள்ளி) முகச்சருமம் இவையெல்லாம் கூட அதிர்ஷ்டம் தான்.

நாம் எல்லோரும் ஒரே வார்ப்பில் படைக்கப்பட்டவர்கள் அல்லர்.ஆதலால் நமது கட்டுப்பாட்டில் இல்லாத சில விசயங்களை விட்டுவிடலாம். ஆனால் இவற்றில் சிலவற்றை மாற்றி அமைத்து அதிர்ஷ்டங்களைப் பெற, நமது உணவு, ஓய்வு,தூக்கம்,உடற்பயிற்சி, மனப்பயிற்சி போன்ற பழக்கங் களில் சீரான ஒழுங்குமுறையைப் பின்பற்றலாம். முகத்தையும் உடலையும் ஓரளவிற்கு சீர் செய்து கொள்ள இந்த நவீன யுகத்தில் எத்தனையோ வழி முறைகள் இருக்கின்றன.



தலைமுடியையும் சரியாகப் பேணி, பின்னோக்கி வாரிக் கொள்வது சிறந்தது.

நாகரிகமாக முடியை விரித்து விட்டுக்கொள்வதும், நெற்றியிலும் கண்ணிலும் முடிக்கற்றைகள் விழுந்து முகத்தின் முழு உருவத்தையும் மறைப்பதும் நல்ல தல்ல. குட்டையாக வெட்டிய முடியாக இருந்தாலும் முகம் முழுமையாகத் தெரிய வேண்டியது மிக அவசியம்.

நமது தோற்றத்தில் ஒரு நிலைப்பாடும் இயைப்புத் தன்மையும் இருக்க வேண்டும். நாம் இருக்கும் இடம் எப்படி சுத்தமாக சீராக இருக்க வேண்டு மோ , அதுபோலத்தான நமது தோற்றமும்.

நன்கு சுத்தமான , துவைத்த, கசங்காத ஆடைகளை அணிய வேண்டும்.நமது உடல்வாகுக்கும் வயதுக்கும் பொருந் தும் ஆடைகளை தேர்ந்தெடுக்கத் தெரிய வேண்டும். காலை யில் எழுந்தவுடன் குளித்து சீராக உடை உடுத்தி, தலைவாரி அதன்பின்னரே வேலைகளை துவங்கவேண்டும். அல்லது குறைந்தபட்சம் முகம் கழுவி , தலைவாரி வேறு உடை மாற்றிக் கொள்வது நல்லது.

சீன சாஸ்திரத்தில், உலகத்தில் உள்ள அனைத்துப் பொருட்களிலும், இன் யாங் என்ற இரு வேறு சக்திகள் இயங்குவதாகச் சொல்லப்படுகின்றது. இந்த இரு சக்திகளும் ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்டவை. ஆனால் ஒன்றில்லாமல் மற்றது இல்லை என்ற நிலையில் உள்ளவை. உலகத்தின் இயக்கமே இவை இரண்டின் கூட்டு வெளிப்பாடே.

உதாரணமாக“இன்”என்பது பெண், சந்திரன், இரவு, குளிர்காலம்,எதிர்மறை சக்தியாகும். “யாங்” என்பது ஆண்,சூரியன்,பகல்,வெய்யில் காலம், நேர்மறை சக்தியாகும். இரவும் பகலும் வேறு வேறு.ஆனால் இரவில்லாமல் பகலில்லை. பகலில்லாமல் இரவில்லை. இப்படி இந்த இரண்டு சக்திகளும் சமச்சீராக இருந்தால் தான் எந்த இயக்கமும் சரியாக இருக்கும்.

இரவு உடையிலேயே நாள் முழுவதும் இருக்கும்போது அந்த உடையில் தங்கிய “சோம்பல் ஓய்வு”என்ற எதிர்மறை சக்தி பகலிலும் நம்மை தொடரும். இப்போது பெரும்பாலான நமது பெண்களிடம் இந்த நைட்டி கலாசாரம் பெருகி யுள்ளது.

குறிப்பாக கிராமத்தில் குடத்தில் தண்ணீர் எடுத்துச் செல்லும் பெண்களிலிருந்து, நகரத்தில் வீட்டுவாசலில் காய்கறி, பழங்கள் வாங்கும் பெண்கள் வரை அனைவருக்குமே இது ஒரு தேசிய உடையாகிவிட்டது. அது போல ஆண்களும் இரவில் உடுத்திய லுங்கியோடே நாள் முழுவதும் கழிக்கின்றனர்.

அதேபோல் இரவு நேரங்களிலும், காற்றோட்டம் வெளிச்சம் இல்லாத அறைகளிலும் துணிகளை துவைத்து உலர வைக்காதீர்கள். இரவு நேரங்களில் வீட்டுக்கு வெளியே (வானவெளிக்கு அடியில்) கொடியில் கிடக்கும் துணிகளில் கெட்ட சக்திகள் குடியேறுகின்றன. இது ஏதோ பழங்கால கதை போல் தோன்றினாலும், இந்தப் பழக்கங்களில் இருந்து விடுபட்டு பாருங்கள் வித்தியாசம் புரியும்.

முடிந்தவரை காலையிலேயே துணிகளைத் துவைத்து மதியத்திற்குள் அவற்றை மடித்து வைத்துவிடுவது நல்லது. மழைகாலமாக இருப்பின் துணிகளை “அயர்ன்” பண்ணி உடுத்துவது நல்லது. வீட்டு வாசலில் இரவு முழுவதும் விளக்கெரிய விடுவதும் இந்த “ இன் யாங்” கை பலன்ஸ் பண்ணத்தான்.

நாம் அணியும் ஆபரணங்களிலும் ஒரு பலன்ஸ் இருக்க வேண்டும்.உங்களது நகைகள் தங்கமானாலும் இமிடேசன், பேஷன் நகைகளானாலும் அவை கற்களும் உலோகமும் கலந்ததாக இருக்க வேண்டும்.

கற்களில் நவரத்தினக் கற்களே உயர்ந்தவை. தங்கமாகவே எல்லா நகைகளையும், அதிக அளவில் போட்டுக் கொண்டால் சமச்சீராக இல்லாமல் போய்விடும். அதோடு கற்களைக் கலந்து ஆபரணங்களை அணிந்தாலும் அளவாகத்தான்போட்டுக் கொள்ளவேண்டும்.இது அழகுக்கு அழகூட்டும்.

நாம் பயன்படுத்தும் கைப் பைகளிலும் அவற்றின் நிறத்தையும், வடிவத்தையும் கருத்தில் கொண்டு தேர்ந்தெடுக்க வேண்டும். பிரவுன்,கருப்பு,பச்சை இவற்றில் செவ்வக வடிவம் சிறந்தது.மஞ்சள்,சிவப்பு,மெருன்,க்ரீம் இவற்றில் சதுர வடிவம் சிறந்தது. வெள்ளை, க்ரீம் முதலியவை வட்ட வடிவத்துக்கு ஏற்றவை.

சரியான சமச்சீரான உணவினாலும், உடற் பயிற்சியினாலும் உடலையும்,மனதையும் சீராக வைத்துக் கொள்வதைத் தொடர்ந்து செய்தால் ஆரோக்கியத்தோடு அழகையும் பேண முடியும். இதோடு பொருத்தமான ஆடை அணிந்து,சரியான ஒப்பனையும் செய்துகொண்டால் எல்லோரும் அழகாகத் தோன்றலாம்.

நம் உருவமே நமது செயல்களுக்கு ஊக்கமும் தன்னம்பிக்கையும் கொடுப்பதால் உலகை வெல்ல இதுவும் ஒரு வழிதானே.

# அன்பே மனிதருடைய மிகப் பெரிய தேவை



அன்பு என்ற இந்தப் புனிதமான வார்த்தையைப் புரிந்து கொள்பவர்கள் மிகச் சிலரே. அன்பே மனிதருடைய மிகப் பெரிய தேவை என வர்ணிக்கப்பட்டிருக்கிறது.தொட்டில் முதல் சுடுகாடு வரை மக்கள் அன்பிற்காக அலைமோதுகிறார்கள்.

சிலர் இந்த இதமான உணர்வில் தழைத்தோங்குகிறார்கள். சிலரோ அது கிடைக்காமல் சோர்வுற்று கடைசியில் சாவைத் தழுவுகிறார்கள்.

சொல்லப்போனால் அன்பைப் பற்றி சிலர் ஏக்கமாகப் பேசுகிறார்கள்.அதைப்பற்றி புத்தகங்களும், கவிதைகளும் வற்றாத ஜீவநிதியாக வந்துகொண்டே இருக்கின்றன.

ஆனால் இவையெல்லாம் அன்பின் அர்த்தத்தை தெளிவுபடுத்துவதில்லை. சொல்லப்போனால் எந்தளவுக்கு இந்த வார்த்தை அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறதோ எந்த அளவுக்கு அதன் அர்த்தமும் தெளிவற்றதாகி வருகிறது. நாம் நம்மை எப்படிப்பட்டவர்களாகக் கருதுகிறோம் என்பது முக்கியமல்ல. அடுத்தவர்கள் நம்மை எப்படிக் கருதுகிறார்கள் என்பது தான் முக்கியம். மற்றவர்களுடைய கருத்துக்கு மதிப்பளித்து அவர்களிடம் அன்பாகவும் மென்மையாகவும் நடந்து கொள்ளவேண்டும்.

இது நம் எல்லோருக்கும் இன்றியமையாத ஒன்று. நாம் மற்றவர்களிடம் கரிசனை காட்டுகிறோமா, அவர்களோடு அன்பாக நடந்துகொள்கிறோமா, மென்மையானவர்களாய் நடந்துகொள்கிறோமா என்பதைப் பற்றி நாம் நம்மையே கேட்டுக்கொள்ளவேண்டும்.

ஒருவருடைய கஷ்டமான சூழ்நிலையைக் கண்டு நாம் கரிசனையோடு நடந்துகொள்ளவேண்டும். இன்று அவர்களுக்கு இந்நிலை என்றால் நாளை நமக்கு என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அன்பாகவும்,பண்பாகவும் நடந்து அடுத்தவர்கள் மனதில் இடம்பிடிக்க வேண்டும்.இதுவே மனிதத் தத்துவம்.

# இலட்சியம் இல்லாத வாழ்க்கை வெற்றி பெறுவதில்லை



இலட்சியம் இல்லாத நோக்கம் வெற்றி பெறுவதில்லை.நம்மில் பலருக்கு இலட்சியமே இருப்பதில்லை என்பதுதான் இதில் வேதனையான விஷயம். நமது வாழ்க் கைப் பயணத்துக்கு எந்தப் பாதை சரியாக இருக்கும் என்ற முன்னோட்ட சிந்தனை கூட பலருக்கு இருப்பதில்லை. தோன்றுகிற வழியில் போவோம். போகும் வழியில் சரியான வழி வந்து சேராதா என்ன என்று பலரும் இருக்கி றார்கள். இலட்சியம் இல்லாத பயணம் நிச்சயமில்லாத வெற்றி என்பதுதான் உண்மை.பல இளைஞர்களுக்கு எதிர்காலத்தில் நாம் என்ன வாகப் போகிறோம் என்பது பற்றிய சிந்தனையே இல்லை. சிந் தனை தோன்றினால் அதைத் தொடர்ந்து கவலை எட்டிப் பார்க்கும்.கவலை நீடித்தால் வாழ்க்கையின் மற்ற சந்தோ ஷங்கள் தொலைந்து போகும். அதனால் முடிந் தவரை சந்தோஷமாக இருந்துவிடுவோம். அப்புறம் வருவதைப் பார்த்துக் கொள்வோம் என்று மனநிலை இன்று நம்மில் பலருக்கு இருக்கிறது.

நிஜத்தில் இவர்களில் பாதிப்பேரை எதிர்கால பயம் பிடித்து ஆட்டவே செய்கிறது.ஆனால் அதை அவர்கள் வெளிப்படுத்திக் கொள்வதில்லை. கும்பலாக நண்பர்கள், கேட்ட பணம் கொடுக்கும் அப்பா என்று அமையும் இளைஞர் களின் வாழ்க்கையில் ஆரம்பத்தில் சந்தோஷந்தான் மலரும். அந்தப் பூக்களின் பின்னே மறைந்திருக்கும் சோக முகம் பலருக்குத் தெரிவதில்லை.

ஒருநாள் அப்பாவுக்கு வயதாகி விடும். நண்பர்கள் ஆளுக்கொரு திசையில் செட்டிலாகி விடுவார்கள். தனித்து விடப்படும் போது எதுவுமே புரியாது. என்னவாகப் போகிறோம் என்பதும் தெரியாது. இந்த சோகத்தை அனுபவிக்கத்தான் முற்பகுதியில் அத்தனை மகிழ்ச்சி அனுபவித்ததோம் என்று முதன்முதலாக வாழ்க்கை மிரட்டவே செய்கிறது அந்த இளைஞனை. காரின் பின் சீட்டிலோ, இரண்டு சக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்தோ செல்பவருக்கு பயணத்தின் நெளிவு சுளிவுகள் அவ்வளவாகத் தெரிவதில்லை. அவர்களைப் பொறுத்தவரை சாலையின் இரு புறமும் வேடிக்கை பார்த்தபடியான ஜாலியான பயணம் அது. வாழ்க்கையையும் பலர் இந்த ரீதியாகத்தான் எடுத்துக் கொள்கிறார்கள். வீட்டில்தான் அப்பா-அம்மா இருக்கிறார்களே. நாம் எதற்காக குடும்பச் செலவுக்கு உழைக்க வேண்டும் என்று சுயநலமாய் சிந்திக்கிறவர்களும் இதில் அடக்கம்.

இறைவழிபாட்டுக்குப் போயிருந்தான் ஒருவன். உருக்கமாக இறைவனிடம் வேண்டிக்கொள்ளும் வேளை வந்த போது திடீரென கோயில் வாசலில் கழற்றிப்போட்டு வந்த 400 ரூபா புது செருப்பு நினைவுக்கு வந்தது. சட்டென பயமும் வந்தது.ஐயோ அந்தச் செருப்பு அப்படியே கிடக்குமா? அல்லது யாராவது அதைப் போட்டுக்கொண்டு போயிருப்பார்களோ என அவன் சிந்தனை தடுமாறியது.கடைசியில் அவன் எதை எதையெல்லாம் இறைவனிடம் வேண்டிக்கொள்ள வந்தா னோ, அதையெல்லாம் மறந்துவிட்டு, இறைவா புது செருப்பு அதுவும் 400 ரூபா, யாரும் எடுத்துக்கொண்டு போயிருக்கக் கூடாது என்பதற்காக மட்டும் வேண்டிக்கொண்டு வெளியே ஓடோடி வந்தானாம்.

நம்மில் பலரும் இப்படித்தான் நமது அத்தியாவசிய பிரச்சினைகளுக்கு மத்தியில் தேவையில்லாத புதுப் பிரச்சினைகளை நுழைத்துக்கொண்டு அல்லல்படுகிறோம். நோக்கத்தை மறந்து இடையில் கிடைக்கும் புதுவிஷயத்துக்கு கவன ஈர்ப்பாகிறோம். இதனால் லட்சியப் பயணத்தில் நாமாக தடைக்கற்களை உருவாக்கிக் கொண்டு விடுகிறோம் என்பதுதான் உண்மை. எனது நோக்கம் இது. இதில் எதுவும் குறுக்கிட அனுமதிக்கமாட்டேன் என்பதாய் முதலிலேயே மனதுக்குள் தீர்மானம எடுத்துக்கொண்டு, இடையில் புதிய விஷயங்களுக்கு அனுமதி தராமல் கொண்ட இலட்சியத்திலேயே குறியாகஇருப்பவர்களுக்கு மட்டுமே வெற்றி சொந்தமாகிறது. பாதையை மாற்றும் பயணங்கள் எப்போதுமே சரியான இடங்களுக்கு வந்து சேர்வதில்லை.

> இலட்சியத்தை அடைய கடக்கவேண்டிய தூரத்தைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் அதை நோக்கி முதல் அடி எடுத்து வைப்பதுதான் கடினமானது.
> ~ ழீ மார்க்வஸ் டொஃபோண்ட்

வலம்புரி

# முகாம் வாழ்க்கையிலிருந்து விடுதலை கிடைக்க வேண்டும்

நீண்டு செல்லும் முகாம் வாழ்க்கை இந்த நாட்டின் எதிர்காலத்தில் மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்த கருத்து தென்னிலங்கை மக்களை சிந்திக்க வைக்கும் எனக் கருதலாம்.

சுமார் மூன்று இலட்சம் மக்களை முகாமில் அடைத்து வைத்திருப்பது மிகப்பெரிய மனித உரிமை மீறல் என்ற உண்மை உணரப்பட்டுள்ள போதிலும் அதற்கான மாற்று நடவடிக்கை எதுவும் இல்லாத பரிதாபம் தொடர்கிறது.

சுமார் மூன்று இலட்சம் மக்கள் முகாமில் முடக்கப்பட்டிருப்பதன் மூலம் இலங்கையில் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கப்படவில்லை என்ற உண்மை உறுதிப்படுத்தப்படுகின்றது.

எதுவாயினும் முகாமில் உள்ள மக்கள் படும் துன்பம் குறித்து அரசு கவனமெடுக்கத் தவறுமாயின் அதன் விளைவை இந்த நாடு அனுபவித்தாகும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

மூன்று இலட்சம் மக்களையும் ஒரே தடவையில் மீளக் குடியமர்த்துதல் என்பது நடைமுறைச் சாத்தியமற்றதாயின் படிப்படியாக மீளக் குடியமர்த்துதல் அல்லது முகாமிற்கு வெளியே செல்வதற்கான அனுமதியை வழங்குதல் வேண்டும்.

இந்தப் படிப்படியான கட்டங்கள்,

* முதியவர்கள்
* கர்ப்பவதிகள்
* மாணவர்கள்
* சிறுவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட குடும்பங்கள் என்ற வரிசையில் முன்னெடுக்கப்படலாம்.

ஆனால் இவை எதுவுமே சாத்தியமற்றதாக காணப்படுகின்றது.

குறிப்பாக முகாம் வாழ்க்கை மாணவர்களின் கல்வியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எத்தனை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டாலும் அவர்கள் தங்கியுள்ள குடிசைகள், அவர்களின் மனநிலை, இருக்கக் கூடிய சுற்றுச் சூழல் என எல்லாமே கல்விக்குப் பாதகமானவையாகவே உள்ளன.

அடுத்தமாதம் ஆகஸ்டில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெறவிருக்கும் நிலையில் முகாம் மாணவர்களின் நிலை எவ்வாறு அமையும் என்பதை சிந்திப்பது அரசின் தலையாய கடமையாகும்.

**எனவே முகாம் வாழ்க்கையிலிருந்தான விடுதலை உடனடியாக வழங்கப்படவேண்டும்.**

# மட்டு. தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தெரிவானோருக்கு புதனன்று கப்பல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலிருந்து மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2009ஆம் கல்வி ஆண்டுக்கு கணிதப்பாடத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம் மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி தேசிய கல்வியற்கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு முன்னர் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் தங்களது பெயர், தேசிய அடையாளஅட்டை இலக்கம் என்பனவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் இவர்களுக்குரிய பிரயாண ஒழுங்கு 8ஆம் திகதி புதன்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு,

கே.ஜசிந்தா (கோண்டாவில் மேற்கு), ஆர்.சுஜித்தா (சுன்னாகம் கிழக்கு),என்.சகிலா (இமையாணன் வடக்கு), கே.லக்ஷனா (கரணவாய் வடமேற்கு),கே.லுக்ஷனா (பன்னாலை), ஆர். ருக்ஷிகா (திருநெல்வேலி), பி.துர்க்கா (கரணவாய் தெற்கு), ரி.விஜயப்பிரகாஷ் (கோண்டாவில் மேற்கு), வி.யாழினி (தாவடி தெற்கு), வி.வசந்துஷா (கொக்குவில் கிழக்கு), எஸ்.சபேஷன் (புலோலி வடகிழக்கு), ரி.ரூபி (இணுவில் கிழக்கு), எஸ்.சசீவன் (மட்டுவில் கிழக்கு), எஸ்.சர்மிளா (கரணவாய் கிழக்கு), கே.மோர்சிலுக்சி (அரியாலை மேற்கு), ரி.பிரசாந் (யாழ்ப்பாணம்). (ச)

# வித்தியாமாலை அணிதல்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவான் வித்தியாமாலை அணிதல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளதாக ஸ்ரீ கல்வி ஆன்மீக மையம் தெரிவித்துள்ளது. (4)

# புதிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் 350 வீடுகளை நிர்மாணிக்க நடவடிக்கை

முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் புதிய வீடமைப்புத்திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு நகரஅபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் புதிதாக 350 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதற்கென 48 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை எதிர்வரும் இரண்டு வாரத்திற்குள் சகல அடிப்படை வசதிகளுடன் கூடிய குறித்த மாவட்டங்களில் 400 புதிய வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இதற்கென 60 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதாகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (6-4)

# இரண்டாம் கட்ட சுய தொழில் நிவாரண கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்டோர்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த எட்டுப் பயனாளிகளுக்கான இரண்டாம் கட்ட சுய தொழில் நிவாரணக் கொடுப்பனவுக்கான அனுமதி சமூக சேவைகள் திணைக்களத்தினால் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது

பின்வரும் பயனாளிகள் எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை தமது அடையாள அட்டை, குடும்ப பங்கீட்டு அட்டை சகிதம் பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவிற்கு சமூகமளிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார்.

பா.இந்து (பெரியமாவடி), இ.விஜயா (மீசாலை மேற்கு), இ.இராஜமலர் (கொடிகாமம் வடக்கு), ஜெ.யசிந்தா (கச்சாய் வீதி), ச.நேசரத்தினம் (உசன்), பொ.சுபத்திரை (நாவற்குழி தெற்கு), பொ.நல்லசேகரம்பிள்ளை (மட்டுவில் தெற்கு), இ.எமிலி ரோஸ் (கச்சாய்வீதி) . (6-29)

# நலன்புரி நிலைய மாணவர்களுக்கான 2 ஆம் தவணைப்பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும்

## வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

இடம்பெயர்ந்த நிலையில் வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சை திட்டமிட்டபடியே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையங்களில் தங்கியிருக் கின்ற ஆசிரியர்களை கொண்டே வினாத் தாள்கள் தயாரிக்கப்பட்டு இப் பரீட்சை நடை பெறவுள்ளது. வவுனியா தெற்கு கல்வி வலய வினாத்தாள் அந்த மாணவர்களுக்கு வழங் கப்படமாட்டாது எனவும் இந்த இரண்டாம் தவ ணைப் பரீட்சை நடத்துவதற்கு ஒரு விசேட குழுவொன்றை ஏற்பாடு செய்துள்ளதாகவும் வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பா ளர் தெரிவித்தார். (6-4)

# புதிய அதிபர் பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சீ.சீ.த.க. பாடசாலையின் புதிய அதிபராக பா.பாலபவன் கடமைப் பொறுப்புக் களை ஏற்றுள்ளார். புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந் தக் கல்லூரியில் கணித ஆசிரியராகப் பணி யாற்றிய இவர் அதிபர் சேவை தரம் 2- II பரீட் சையில் சித்தியடைந்தமையைத் தொடர்ந்து மேற்படி பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப் பட்டுள்ளார். (6)

# சமய பேச்சுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மகோற்சவத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு முத்துமாரி அம்பாள் கல்யாண மண்டபத்தில் பேச்சுப் போட்டிகள் இடம்பெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்கள் உரிய நேரத்திற்கு சமூகமளிக்கும்படி பரிபாலனசபைத் தலைவர், ஆசிரியர் தி.ரவீந்திரநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இவ்ஆலய இரதோற்சவமான நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பரிசில் வழங்கும் வைபவம் இடம்பெறவுள்ளது. (6-136)

# பயிற்சி வகுப்புக்கள்

(சாவகச்சேரி)


மத்தியஸ்தர்சபை ஆணைக்குழுவின் அனுசரணையுடன் நீதியமைச்சின் அதிகாரிகளினால் நடத்தப்படும் சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையின் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கான 5 ஆம் நாள் பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. (6-4-29)

# அனுபவப் பகிர்வு

அல்வாய் கலை அகத்தில் நடைபெற்று வரும் "அவை" கலை இலக்கியச் சுவைஞர் ஒன்றுகூடல் வரிசையில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஞானம் சஞ்சிகை ஆசிரியர் தி.ஞானசேகரனின் அனுபவப் பகிர்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு மூத்த எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறும். (ஓ-6)

# முன்சார்பு எண்ணங்களும் அதன் விளைவும்



இந்த உலகமே ஒரு போலியான ஒன்று. இங்கு வாழுகின்ற மனிதனும் ஒரு போலி. உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசக்கூடியவர்கள் இம் மனிதர்கள். எவ்வளவுதான் ஒரு மனிதன் உடல் அழகும், அறிவும் பெற்று உயர்ந்திருந்தாலும் அவனுடைய மனது அழகில்லாமல் அசுத்தமாக, தீய எண்ணங்களும், முன் சார்பு எண்ணங்களும் நிறைந்து இருக்குமானால் அவன் உள்ளம் இருளாகவே இருக்கும். யாரும் அவனிடம் அதிகம் நெருங்கவோ , பழகவோ மாட்டார்கள். அவனிடத்தில் உறவே வைத்துக் கொள்ளமாட்டார்கள். எனவே அகமும் புறமும் ஒன்றாக இருக்கவேண்டும்.

இன்றைய நற்செய்தியில் இதைத்தான் நாம் பார்க்கின்றோம். இயேசு தம் சொந்த ஊரில் உள்ள தொழுகைக் கூடத்தில் மிகச் சிறப்பாகப் போதித்தார். இதைக் கேட்டு மலைத்துப் போய் தாங்கிக்கொள்ள முடியாத உள்ளத்திலே புழுங்கிப் போன அந்த பரிசேயக் கூட்டம், தங்களைவிட ஒரு தச்சன் மகன் ஞானத்தோடும் வல்லமையோடும் பேசுவதா? இது எவ்வாறு இயலும்? என்று நினைத்தனர்.

இங்கு இயேசுவின் குடும்ப நிலையை வைத்து வெளிப்புறத்தில் கணக்கிட்டு கேவலப்படுத்தியது , எள்ளி இழிவு செய்தது, இவர்களின் முன்சார்பு எண்ணங்கள் தான் என்பது தெள்ளத் தெளிவாகிறது. இதன் விளைவு அவர்களின் நம்பிக்கையின்மை ; பின் அதன் விளைவு புதுமைகளோ, நல்ல செயல்களோ அங்கு நடைபெறாமை.

எனவே முன்சார்பு எண்ணங்கள் நம்பிக்கையின் எதிரியாகவும் ; நம்பிக்கைக்குத் தடையாகவும் ;குறை சொல்கின்ற தீய பண்பின் பிறப்பிடமாகவும் இருக்கின்றன. எனவே வாழ்வில் நல்லது நடக்க வேண்டும் என்றால் நல்லதாகவே சிந்திக்க வேண்டும். வல்ல செயல்கள் நடைபெறவேண்டும் என்றால் குறை சொல்வதை நிறுத்த வேண்டும்.

குறுகிய மன நிலையை விட்டு பரந்த மனநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டும். பார்வைகள் குறுகினால் பாதைகள் தடுமாறும். பார்வைகள் விரிந்தால் பாதைகள் தெளிவாகும்; பயணங்கள் நிறைவாகும்.

ஆம், நம்முடைய முன்சார்பு எண்ணங்களும் தவறான கணிப்புக்களும் ஒருவனுடைய நல்ல குணத்தைப் பாராட்டுவதற்குப் பதிலாக அவனுடைய மனத்தில் சில காயங்களை, மனப்புண்களை, ஆறாத வடுக்களை ஏற்படுத்தி இறுதியில் உயிரையும் எடுக்கின்றன.

இது தான் இயேசுவுக்கும் நடந்தது. எனவே நம்மிடம் இருக்கும் முன் சார்பு எண்ணங்களை அகற்றி ஒருவரை அவராகவே ஏற்றுக்கொண்டு அவருடைய திறமைகளை , நல்ல செயல்களைப் பாராட்டுவோம்.

ஜோன் றொபேர்ட்

# ஜனநாயக உறுதிப்பாட்டுக்கு வித்திடும் புதிய தேர்தல் முறை

ஜனநாயகத்தை வலுப்படுத்தும் முக்கிய சக்தியாக தேர்தல்கள் விளங்குகின்றன. ஏனவே தேர்தல்கள் நம்பகத்தன்மை மிக்கதாக இருக்கவேண்டும்.இந்நிலையில் எமது நாட்டில் நடைமுறையில் உள்ள விகிதாசார தேர்தல் முறையானது பொது மக்களிடையேயும் அரசியல்வாதிகளிடையேயும் பல்வேறு அதிருப்தி நிலையினை தோற்றுவித்து வருகின்றமை பதியதொரு விடயமல்ல.

காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன தனக்குக் கிடைத்த ஆறில் ஐந்து பெரும்பான்மையை பயன்படுத்தி ஜனநாயக சாயம் பூசப்பட்ட விகிதாசார தேர்தல் முறையை அறிமுகம் செய்தார்.

இதனடிப்படையில் தற்போது எமது நாட்டில் இடம்பெறுகின்ற பாராளுமன்ற, மாகாணசபை மற்றும் பிரதேச உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் யாவும் விகிதாசார முறைமையின் கீழான பட்டியல் முறையிலேயே இடம்பெற்று வருகின்றன.

ஒரு குறிப்பிட்ட (பல அங்கத்தவ) தேர்தல் தொகுதியில் அல்லது ஒரு தேர்தல் மாவட்டத்தில் வேட்பாளருக்கு அல்லது பல வேட்பாளர்களை உள்ளடக்கிய ஒரு குழுவுக்கோ அல்து கட்சிக்கோ அளிக்கப்பட்ட வாக்குகளின் விகிதாசாரத்துக்கேற்ப ஆசனங்களை ஒதுக்கும் உபாயங்களைக் கொண்ட வாக்களிக்கும் முறையை விகிதாசார தேர்தல் முறை எனப்படுகிறது.

விகிதாசார தேர்தல் முறையானது தனிமாற்று வாக்குமுறை, பட்டியல் முறை என்றவாறு இரண்டு பிரதான மாதிரிகளைக் கொண்டதாகும். கட்சிகள் அல்லது குழுக்கள் பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கைக்கு இணங்க அதிக விருப்பத் தெரிவு வாக்குகளைப் பெற்ற அபேட்சகர்கள் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுகின்றனர். விகிதாசார தேர்தல் முறையின் கீழ் பல குறைபாடுகள் காணப்படுவதாகவும் இத் தேர்தல் முறை மக்களை கூறுபோடும் தன்மைக்கு இட்டுச் செல்லக் கூடிய நம்பகத் தன்மையற்றது என்றும் புத்தி ஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

விகிதாசார தேர்தல் முறையின் கீழ் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் அதிகளவு பணத்தைச் செலவு செய்ய வேண்டியுள்ளது. இதனால் சாதாரண பொதுமக்கள் அரசியலில் ஈடுபட முடியாத நிலை உருவாகின்றது. இது ஜனநாயகத்துக்குப் பாதகமான செயலாகும் என்பது சிலரின் வாதமாகும்.

விகிதாசார தேர்தல் முறையானது உட்கட்சி பூசல்களை அதிகரிக்கச் செய்கின்றது. எப்படியாவது வெற்றிபெற்று விட வேண்டும் என்ற நோக்கில் தமது கட்சி வேட்பாளர்களையே தாக்குவதும் அவர்களின் போஸ்டர்களைக் கிழிப்பது உள்ளிட்ட பல்வேறு அநாகரிக செயற்பாடுகளில் ஈடுபடுவதும் இத் தேர்தல் முறையின் பிரதான குறைபாடாக உள்ளது.

அத்தோடு முன்னர் நடைமுறையில் இருந்த தொகுதிவாரி தேர்தல் முறைமையின் மூலம் மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு நிலை காணப்பட்டது. இத் தொகுதி வாரி தேர்தல் முறைமையின் ஊடாக ஒவ்வொரு தொகுதிக்கு குறைந்த பட்சம் ஒவ்வொரு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதனூடாக மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. அத்தோடு மக்களின் பிரச்சினைகளை இனம் கண்டு அரசியல்வாதிகள் தீர்த்துவைப்பதற்கும் வழி ஏற்பட்டது. இதனூடாக பல தேர்தல் தொகுதிகள் துரித அபிவிருத்தி கண்டன.

எனினும் விகிதாசார தேர்தல் முறைமையின் மூலம் மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையேயான தொடர்பு விரிசல் கண்டுள்ளது. இத் தேர்தல் முறைமையின் கீழ் குறித்த ஒரு தொகுதிக்கு எந்தவொரு உறுப்பினரும் தெரிவு செய்யப்படாத நிலை ஏற்படலாம். இந்த நிலையினை நாம் தற்போது கண்கூடாகவும் காணமுடிகின்றது. அத்தோடு மாவட்ட அடிப்படையில் உறுப்பினர் தெரிவு இடம்பெறுகின்றமையால் அரசியல்வாதிகளின் "நோக்கற் பரப்பு" அல்லது "ஆட்சி எல்லை" அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் அரசியல்வாதிகளால் தமது மாவட்ட மக்களுக்கு தன்னை தம்பி வாக்களித்த மக்களுக்கு உருப்படியான சேவையினை வழங்க முடியாத நிலை ஏற்படுகின்றது. இதனால் மக்கள் அதிருப்தி நிலையினை வெளிக்காட்டி வருகின்றனர்.

விகிதாசார தேர்தல் முறைமையின் மூலம் பாமர மக்கள் வாக்களிக்க மிகவும் சிரமப்படுகின்றார்கள். வாக்குச் சீட்டின் அளவு பெரிதாகக் காணப்படுகின்றமையாலும் தேர்தல் சின்னங்களை விளங்கிக்கொள்வதில் பாமர மக்கள் இடர்படுகின்றமையாலும் விகிதாசார தேர்தல் முறை எதிர்பார்த்த வெற்றியினை வழங்குவதாக இல்லை. அத்தோடு கடந்த காலத் தேர்தல்களில் வாக்களிப்பு வீதமும் குறைந்து காணப்படுகின்றது.

இவற்றோடு நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் தொகையும் கணிசமாக அதிகரித்து வருகின்றது. அரச ஊழியர்களால் அளிக்கப்படும் தபால் மூல வாக்குகள் கூட கணிசமாக நிராகரிக்கப்பட்டமையை கடந்த கால தேர்தல்கள் வெளிப்படுத்தியுள்ளன.

இந்நிலையில் ஜனநாயகத்தின் முரண்பாட்டு சக்தியாக இனங்காணப்பட்டுள்ள விகிதாசார தேர்தல் முறையினை மாற்றியமைத்து புதியதொரு தேர்தல் முதறையினை அறிமுகம் செய்வது குறித்து அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இதற்கென பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றும் அரசி னால் நியமிக்கப்பட்டது. இக் குழுவின் அறிக் கையை ஆராய்வதற்கு அமைச்சரவை உப குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் விகிதாசார தேர்தல் முறையில் மாற்றம் செய்வதால் தமது பிரதிநிதித்துவம் கணிசமாகக் குறைவடையும் எனவும் சில மலையக மற்றும் சிறுபான்மை அரசியல் கட்சிகள் தமது சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளன.

ஏற்கனவே நடைமுறையில் இருந்த தொகுதிவாரி தேர்தல் முறை பெரும்பான்மை பிரதிநிதிகளின் தெரிவிற்கு சாதகமாக அமைந்து காணப்பட்டதாகவும் இதனால் சிறுபான்மை பிரதிநிதித்துவத்தில் வீழச்சி ஏற்பட்டதாகவும் இக் கட்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

எனவே,மீண்டும் ஒரு மாற்றம் தேர்தல் முறையில் மேற்கொள்ளப்படுமானால் அது பாதகத்தை சிறுபான்மையினருக்கு ஏற்படுத்துமெனவும் இக் கட்சிகள் தெரிவிக்கின்றன.

எனினும் புதிய தேர்தல் முறை ஒன்று அறிமுகம் செய்யப்படுமானால் சிறுபான்மை கட்சிகள் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்தும் புத்திஜீவிகள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இதற்கிணங்க புதிய தேர்தல் முறை நடைமுறைக்கு வருவதற்கு முன் தொகுதி மீள் நிர்ணயம் இடம்பெம் போது மலையக அல்லது சிறுபான்மை மக்கள் பெரும்பான்மையினராக இருக்கக் கூடியதாக சில தொகுதிகளை அமைத்துக் கொள்வதற்கு மலையக அல்லது சிறுபான்மைக் கட்சிகள் முயற்சிக்க வேண்டும்.

பதவியில் உள்ள அரசுடன் நட்புறவை பேணும் நிலையில் இது சிரமமானதல்ல என்பது சிலரின் க்ருத்து.அத்தோடு விகிதாசார தேர்தல் முறை நடைமுறையில் வந்ததன் பின்னர் ஏதேனும் ஒரு தேசிய கட்சியுடன் இணைந்தே போட்டியிடுவதாகவும் தனித்துப் போட்டியிட்டால் கூடுதலான பிரதிநிதிகளைப் பெற முடியாமல் போகும் என்பதாலேயே இந்நிலை ஏற்பட்டதாகவும்இவர்கள் மேலும் குறிப்பிடுகின்றனர்.

எவ்வாறாயினும் ஜனநாயகத்தின் ஆணிவேர் என்ற வகையில் தேர்தல்கள் மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கவேண்டும்.எனினும் விகிதாசார தேர்தல் இந் நிலைக்கு ஆப்பு வைத்துள்ளது.

**துரைசாமி நடராஜா**

எனவே, புதிய தேர்தல் முறை அவசியம் என்பது சகலரதும் கோரிக்கையாகவே உள்ளது. விகிதாசார மற்றும் தொகுதிவாரி தன்மைகளை கலந்து பெற்ற புதிய தேர்தல் முறையொன்று கருக்கொள்ள உள்ளதாக அரசும் புத்திஜீவிகளும் தெரிவித்துள்ளனர். இது மிகவும் அவசியமானதே.

எனவே, விரைவில் புதிய தேர்தல் முறை உருவாக்கப்பட்டடு ஜனநாயகத்தின் உறுதிப்பாட்டுக்கு வித்திட வேண்டும் என்பது சகலரினதும் எதிர்பார்ப்பாகும்.





ஐ.ஒ.எம். புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு தம்பாட்டி கிராமத்தில் முப்பது இலட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட கடலுணவு உற்பத்தி மையக் கட்டடத்தை யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் சம்பிரதாய முறைப்படி நாடாவெட்டி திறந்து வைப்பதையும், அருகில் ஐ.ஓம்.எம். நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மொகமட் அப்திகர் நிற்பதை முதலாவது படத்திலும், கடலுணவு உற்பத்தி மையக் கட்டடத்தை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்:- கல்வயல் நிருபர்)

## இலங்கை வந்துள்ள அகதிகள்

(மானாமதுரை)

திருகோணமலையைச் சேர்ந்த பாலுச்சாமி (55), ஜெயச்சந்திரன் (25), டெனிராஜா (27) உள்ளிட்ட 15 பேர் கடந்த 2006 ஆம் ஆண்டு அகதிகளாக இராமேஸ்வரம் வந்தனர்.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மூங்கில் ஊரணி அகதிகள் முகாமில் தங்கியிருந்த இவர்கள், இலங்கையில் போர் முடிவுக்கு வந்தால் அங்கு செல்ல விருப்பம் தெரிவித்து, மறுவாழ்வு ஆணையாளருக்கு விண்ணப்பித்தனர்.

இவர்கள் கடந்த 25 ஆம் திகதி திருச்சியில் இருந்து கொழும்பு புறப்பட்டு தற்போது திருகோணமலையை வந்தடைந்துள்ளனர். (6)

## தொலைக்காட்சி பார்க்கும் குழந்தைகளின் கற்கும் திறன் குறைகிறது- ஆய்வில் தகவல்

தொலைக்காட்சி பார்ப்பது குழந்தைகளின் கற்கும் திறனைப் பாதிப்பதாக அமெரிக்காவில், சியாட்டிலில் வோஷிங்டன் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

குழந்தைகளின் கற்கும் திறனானது வீட்டில் உள்ள பெரியவர்கள் பேசுவதைக் கேட்பதால் இயல்பாக வளரக்கூடியது.

இந்த இயல்பான வளர் திறனானது சமீப காலத்தில் மிகவும் குறைந்து காணப்படுகிறது. இதற்குக் காரணம் வீட்டில் உள்ள பெரியவர்கள் குழந்தைகளிடம் நேரம் ஒதுக்கிப் பேசாமல் தொலைக்காட்சி பார்ப்பதிலேயே அதிக நேரம் செலவிடுவதுதான் எனத் தெரியவந்துள்ளது.

2மாதம் முதல் 2வயது வரை உள்ள 329 குழந்தைகளிடம் ஆய்வு நடத்தியதில் குழந்தைகளுக்கு தொலைக்காட்சி சத்தம்தான் அதிக பரிச்சயமானதாகத் தெரிகிறது.

இதுமட்டுமல்லாமல் பெரியவர்களிடம் பேசுவதற்கும், பெரியவர்களின் பேச்சை கேட்பதற்கும் குறைவான வாய்ப்பு அமைவதால் குழந்தைகளின் பேச்சுத் திறனும் பாதிக்கப்படுகிறது.

தொலைக்காட்சி பார்க்காத குழந்தைகளின் கற்கும் திறன் அதிகமாகவும்,தொலைக்காட்சி பார்க்கும் குழந்தைகளின் கற்கும் திறன் குறைவாகவும் உள்ளது.குழந்தைகளுக்கு 2 வயது முடியும் வரை பெற்றோர்கள் தொலைக்காட்சி பார்ப்பதைக் குறைத்துக்கொண்டு அவர்களுடன் அதிக நேரம் செலவழிக்க வேண்டும். குழந்தைகள் அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பதைப் பெற்றோர்கள் தடுக்க வேண்டும்.அவ்வாறு செய்தால் குழந்தைகளின் கற்கும் திறன் மேம்படக் கூடும் என அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.(ஓ-6)

## மியன்மார் எதிர்க்கட்சித் தலைவியை விடுவிக்குமாறு ஐ.நா.செயலர் கோரிக்கை




மியன்மாரில் சிறை வைக்கப்பட்டுள்ள எதிர்க் கட்சித் தலைவர் ஆங் சாங் சூகி மற்றும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலைமைச் செயலாளர் பான் கீ மூன் அந்நாட்டு இராணுவ ஆட்சியாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பர்மா தலைநகர் நேய் பியடோவில் அந் நாட்டின் இராணுவத் தலைவர் ஜெனரல் ஷான் ஷ்வேயை சந்தித்து நடத்திய பேச்சு வார்த்தையை அடுத்து கருத்துத் தெரிவித்த பான் கீ மூன், சிறையில் உள்ள ஆங் சாங் சூகியை சந்திப்பதற்கு தான் விடுத்த கோரிக்கைக்கான பதிலுக்காக காத்திருப்பதாகவும் குறிபிட்டுள்ளார்.

மீண்டும் நீடிக்கப்பட்ட வீட்டுக் காவல் உத்தரவு விதிகளை மீறிய குற்றச்சாட்டுகளுக்காகவே சூகி மீது வழக்குத் தொடரப்பட்டது. (6)

# முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பல் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 292

## பரணவித்தாண அரைச்சதமடித்து ஆறுதல்



(காலி)

முன்னணித்துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 292 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடும் பாகிஸ்தான் அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 15 ஓட்டங்களை மாத்திரம் எடுத்திருந்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் நேற்று காலி சர்வதேச விளையாட்டு அரங்கில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற் சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தீர்மனித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு வர்ணபுர 02, சங்கக்கார 09 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தனர்.

எனினும் 3ஆவது விக்கெட்டுக் காக இணைந்து பரண வித்தாண- ஜெயவர்த்தனா ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கியது. இதில் பரணவித்தாண தனது முதலாவது டெஸ்ட் அரைச்சதத்தை பூர்த்தி செய்து நம்பிக்கையளித்தார்.

இந்த ஜோடி 3ஆவது விக்கெட்டுக்காக 75 ஓட்டங்களை இணைப் பாட்டமாக வழங்கிய போது மஹேல ஜெயவர்த்தனா 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து சமரவீர களமிறங்க மறுமுனையில் பரணவித்தாண 72 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து சமரவீர 31 ஓட்டங்களுடனும் திலகரட்ண டில்சான் 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இலங்கை அணி 194 ஓட்டங்களுக்கு 6ஆவது விக்கெட்டை இழந்தது.

இந்நிலையில் 7ஆவது விக்கெட்டுக்காக இணைந்த மத்யூஸ்-குலசேகர ஜோடி ஓரளவு நிதானமாகத்துடுப்பெடுத்தாட இலங்கை அணி 200 ஓட்டங்களைக் கடந்தது.

இந்த ஜோடி 7ஆவது விக்கெட்டுக்காக 47 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது அஞ்சலோ மத்யூஸ் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 241ஓட்டங்களை எடுத்து 7 ஆவது விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய துடுப் பாட்ட வீரர்கள் ஓரளவு நம்பிக்கை யளிக்க இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 292 ஓட்டங் களை எடுத்து கௌரவமான இலக்கை தொட்டது.

இதில் குலசேகர 38 ஓட்டங்களையும் ஹேரத் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் துஷார 10 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் முகமெட் அமீர் 3 விக்கெட்டையும் அப்துர் ரஜீப், யூனிஸ்கான் மற்றும் சகிட் அஜ்மல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் உமர் குல் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு சல்மான் பட் பூச்சியத்துடனும் மன்சூர் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். இந்நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களை இழந்து 15 ஓட்டங்களை மாத்திரம் எடுத்திருந்தது.

இதில் அணித்தலைவர் யூனிஸ்கான் 07, ரஜீப் ஓட்டமெதனையும் ஆரம்பிக்காமல் ஆட்டமிழக்காமல் களத்திலி ருந்தனர். பந்து வீச்சல் குலசேகர மற்றும் துஷார ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை சாய்த்தனர்.

## விம்பிள்டனில் மூன்றாவது முறை செரீனா வில்லியம்ஸ் சம்பியன்



(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் மூன்றாவது முறை சம்பியனானார்.

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நடக்கிறது. இதில் பெண்கள் ஒற்றையர் இறு திப்போட்டியில்நடப்புசம்பியன் வீனஸ் வில்லியம்ஸ் தனது சகோதரி மற்றும் உலகின் நம்பர்-2 வீராங்கனையான செரினா வில்லியம்ஸை சந்தித்தார். விறுவிறுப்பான இறுதிப் போட்டியில் செரினா 7-6,6-2 என்ற நேர் செட் டில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார். இதன் மூலம் இத் தொடரில் மூன்றாவது முறையாக (2002-2003,2009) சம்பியன் பட்டம் வென்று அசத்தினார். இது இவரது 11ஆவது கிராண்ட்ஸ்லாம் (விம்பிள் டன்-3, ஆஸி.-4, பிரெஞ்-1, யு.எஸ்., -3) பட்டமாகும்.

## மழை குழப்படி; தோனி அதிரடி

# இந்திய அணி திரில் வெற்றி மேற்கிந்தியத்தீவுகள் பரிதாபம்



(சென் லூசியா)

கார்த்திக்-காம்பீரின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி மூன்றாவது ஒரு நாள் போட்டியில் டக்-வேத் லூயிஸ் முறையில் 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத்தீவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 4 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடுகின்றது.




இதில் நேற்றுமுன்தினம் 3ஆவது போட்டி சென்லூசியாவில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது.

இப் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் மழை பெய்தமையால் ஆட்டம் தாமதமாக ஆரம்பமானது. இதனால் போட்டி இரு அணி களுக்கும் தலா 41 ஓவர்கள் கொண்ட ஆட்டமாகக் குறைக்கப்பட்டது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 3.3 ஓவர்களில் 27 ஓட்டங் களை எடுத்த போது மீண்டும் மழை குறுக்கிட்டது.

எனினும் சிறிது நேரத்தில் மழை விட மீண்டும் ஆரம்பமாகி மேற்கிந் தியத்தீவுகள் அணி 9.1 ஓவர்களில் 1 விக்கெட்டை இழந்து 56 ஓட்டங் களை எடுத்த போது மீண்டும் மழை குறுக்கிட ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

சில மணி நேரம் நீடித்த பின்பே ஆட்டம் மீண்டும் ஆரம்பமாகிய போது போட்டி இரு அணிகளுக்கும் தலா 27 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

இதனடிப்படையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 27 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங் களை எடுத்தது.

இதில் சர்வான் 59 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 62 ஓட்டங்களையும் அணித் தலைவர் ஹயில் 27, மோர்டன் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் நெகரா 3 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுக்களையும் யூசுப்பதான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 27 ஓவர்களில் 187 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 13.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 84 ஓட்டங்களை எடுத்தபோது மழை குறுக்கீடு செய்ய ஆட்டம் இடை நிறுத்தப் பட்டது.

சில மணி நேரம் நீடித்த மழை விட மீண்டும் ஆட்டம் ஆரம்பமாகிய போது இந்திய அணிக்கு டக்-வேத் லூயிஸ் முறையில் 22 ஓவர்களில் 159 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதனடிப்படையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தோனியின் அதிரடியின் மூலம் 21.5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களை எடுத்து டக்-வேத் லூயிஸ் முறையில் 6 விக் கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் அணித்தலைவர் தோனி ஆட்டமிழக்காமல் 34 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 46 ஓட்டங்களையும் தினேஷ் கார்த்திக் 43 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 47 ஓட்டங்களையும் காம்பீர் 38 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 44 ஓட்டங்களையும் குவித்தனர்.


பந்துவீச்சில் டயானி பிரவோ, பேர்நார்ட் மற்றும் பென் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் இந்திய அணி 4 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இப் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த அணித்தலைவர் தோனி ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இத் தொடரின் 4ஆவதும் இறுதியுமான போட்டி இன்று சென்லூசியில் நடைபெறுகிறது.

# இறுதிப் போட்டியில் நுழைந்து ரோஜர் பெடரர் புதிய சாதனை



(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டிக்கு உலகின் நம்பர்-2 வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் தொடர்ந்து 7ஆவது முறையாக முன்னேறி சாதனை படைத்தார்.

தவிர 20ஆவது கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்று சாதித்துள்ளார். கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் இங்கிலாந்தின் தலைநகர் லண்டனில் நடக்கிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் அரையிறுதியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், ஜேர்மனி வீரர் டொமி ஹுஸை எதிர் கொண்டார். டை-பிரேக்கர் வரை நீடித்த முதல் செட் டை பெடரர் 7-6 என கைப்பற்றினார்.

தொடர்ந்து அசத்திய பெடரர் இரண்டாவது செட்டை 7-5 என போராடி தன்வசப்படுத்தினார். 3 ஆவது செட்டில். அபாரமாக ஆடிய பெடரர் 6-3 என சுலபமாக கைப் பற்றினார்.

இறுதியில் பெடரர் 7-6,7-5,6-3 என்ற நேர்செட்டில் வெற்றி பெற்று தொடர்ந்து 7ஆவது முறையாக (2003-2009) இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இதன் மூலம் விம்பிள்டன் டென் னிஸில் தொடர்ந்து 7ஆவது முறையாக இறுதிப்போட்டிக்கு முன்னேறிய முதல் வீரர் என்ற சாதனைப் படைத்தார்.

தவிர கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் 20ஆவது முறையாக (விம்பிள்டன்-7, யு.எஸ்.-5, ஆஸி.-4, பிரெஞ்-4) இறுதிப் போட்டிக்கு முன்னேறி சாதனை படைத்துள்ளார்.

## வடமாகாண விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான எல்லே போட்டியில் அருணோதயாக் கல்லூரி முதலிடம்

(மன்னார்)

வடக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான எல்லே போட்டி யில் அளவெட்டி அருணோதயா கல்லூரி முதலாமிடத்தை பெற்றது.

வடக்கு மாகாண மட்ட 2009ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் மன்னா ரில் ஆரம்பமானது.

இதில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான எல்லே போட்டி யில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி முதலாமிடத்தையும் வவுனியா மடுகந்த தேசியப் பாடசாலை இரண்டாமிடத்தையும் பெற்றதுடன் மூன்றாமிடத்தை வவுனியா கணேஸ்வரா மகா வித்தியாலயம் பிடித்தது.

யாழ். மாவட்ட பாடசாலைகளில் இவ் வருடமே எல்லே போட்டி ஆரம் பிக்கப்பட்ட நிலையில் அளவெட்டி அரு ணோதயாக் கல்லூரி வீராங்கனை கள் முதலிடத்தை பிடித்தமை குறிப் பிடத்தக்கது.

## மட்டு. வாவியில்...

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் மட்டக்களப்பின் தென்பகுதியில் உள்ள கிரான்குளம் பகுதியில் கடல் பாதையை பயன்படுத்தி நேற்றுக்காலை தப்பிச் செல்வதற்கு முற்பட்டார். மோகன் அல்லது நல்லரட்ணம் மகேந்திரராஜா என்ற போராளியே இவ்வாறு தப்பிச் செல்ல முயற்சித்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

நீரேரியில் சிறிய படகு ஒன்றில் மோகன் தனியாக தப்பிச் செல்ல முயற்சித்ததனை கண்டுகொண்ட படையினர் குறிப்பிட்ட படகை தடுத்து நிறுத்தினர். அப்போது படையினரில் ஒருவரிடம் இருந்த துப்பாக்கி ஒன்றை பறித்த மோகன் படையினரை நோக்கி துப்பாக்கிச் சூட்டினை நடத்தினார் என்றும் பின்னர் படையினர் சுட்டதில் அவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## தேர்...

குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களுக் கூடான பேருந்து சேவைகள் அதிகரிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-14)

# தமிழர்களின் துரதிர்ஷ்டமான...

இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் சீனா கடந்த 50 வருட காலத்தில் இலங்கை அரசுக்கு ஒத்துழைக்கும் நிலையான கொள்கையினை கொண்டுள்ளது. எனினும் இலங்கை தீவினுடனான பொருளாதார சுயலாப நோக்கத்திலேயே இந்த ஒத்துழைப்புக் கொள்கை பேணப் பட்டு வருகிறது.

ஆனால் சீனாவை ஒரு முறை அனுமதித்தால் அது எந்த எல்லைக்கும் செல்லும் என பாகிஸ்தான் ஒப்சேவர் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தாம் மேற்கொண்ட மோதல் மற்றும் போர்க் குற்றங்களை மேற்குலகுக்கு மறைக்கவும் இந்தியாவை முடக்கவும் சீனாவை துருப்புச் சீட்டாக பயன்படுத்த நினைத்திருக்கிறது.

ஆனால் அதன் பின்விளைவு விரைவில் வரும் என தெரிவித்துள்ளது. இலங்கையின் துறைமுகம், சுற்றுலாத்துறை போன்ற பொருளாதாரம் சார்ந்த துறைகளின் கண்ணோட்டத்தை செலுத்திய சீனா இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் எந்த வித முன்னெடுப்பையோ அல்லது யோசனைகளையோ முன்வைக்கவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியது.

இதே வேளை இந்தியா நேரத்துக்கு நேரம் இலங்கை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளை கடைப் பிடித்து வந்துள்ளது.

எவ்வாறாயினும் பிராந்திய ரீதியான அதிகாரத்தை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ளும் பொருட்டே இந்தியா எந்த கால கட்டத்திலும் செயற்பட்டிருக்கின்றது. அத்துடன் இது இரட்டை போக்கையும் கடைப்பிடித்துள்ளது.

இந்த நடவடிக்கை இந்தியாவின் எல்லை கடந்த அதிகார பலத்தையும் இலாபத்தையும் பெறுவதற்கு இலங்கைத் தமிழர்களை பகடைகாயாக பயன் படுத்தியமையாக கருதலாம்.

இந்த நிலையில் இலங்கை தமிழர்களின் சுதந்திரம் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் இந்தியா வழங்கும் பணத்தினாலோ வார்த்தைகளாலோ இந்தியாவின் கைகளில் படிந்துள்ள இலங்கை தமிழர்களின் இரத்தப்படிவை கழுவ முடியாது என பாகிஸ்தான் ஒப்சேவர் தெரிவித்துள்ளது. (ச-5)

## கிழக்கில்...

மாவட்டம் மகிழங்கேணி, பெண்டுகள்சேனை ஆகிய இடங்களிலும், பொலனறுவை சொருவில காட்டுப் பகுதி மற்றும் வாகரை, வெருகல் ஆகிய இடங்களிலேயே ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. (ச-5)

## குடாநாட்டுப்...

ஜனாதிபதியின் விசேட கவனத்திற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை வலம்புரி நிர்வாகம் மேற்கொண்டுள்ளது. அதே நேரம் குறித்த பத்திரிகையின் விளம்பர முகவர் வலம்புரி நாளிதழை மிரட்டிய தகவலை அனைத்து வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும் மின் அஞ்சல் மூலம் அனுப்புவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தத்தம் பத்திரிகைகளைக் காப்பாற்ற குய்யோ முறையோ எனக் கூக்குரல் போடுவோர் ஏனைய பத்திரிகைகளின் உயிரைக் குடிக்க முனைவது எந்தளவுக்கு நியாயமானதென்பதை அமைச்சர்கள், அரசியல் கட்சிகள் தீர்மானிக்க வேண்டும். (ந)

## 150 கிலோ தங்க...

அளவிற்கு தங்க நகைகள் கண்டெடுக்கப்பட்டன. நேற்று முன்தினம் கூட 200க்கும் அதிகமான தங்க வளையல்கள் படையினரால் கண்டெடுக்கப்பட்டிருந்தன. இந்த நகைகள் புதுக்குடியிருப்பில் இருந்து மக்கள் வெளியேறும்போது விடுதலைப் புலிகளால் பெறப்பட்டிருக்கலாம். மக்கள் வெளியேறும்போது தங்கள் நகைகளை விடுதலைப் புலிகளிடம் அடமானமாகவோ அல்லது மீண்டும் அவர்களது பகுதிக்கு திரும்பி வருவதற்கான உத்தரவாதமாகவோ கொடுத்துதிருந்ததாக இருக்கக் கூடும்.

தற்போது அந்தப் பகுதியில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை வைத்து நகைகளின் உரிமையாளர்களை அடையாளம் காணும் நடவடிக்கையில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். அவர்கள் அடையாளம் காணப்பட்டவுடன் அவர்களிடம் நகைகள் திருப்பிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்த நகைகள் கடுமையான உழைப்பின் மூலம் மக்கள் பெற்றுக் கொண்டவை என்பதை நாங்கள் உணர்கிறோம். எனவே அவை அவர்களிடம் சென்று சேரவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-14)

## வவுனியா...

ஊடுருவல்கள் இடம்பெறலாம் என்பதால் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் புலனாய்வுத் துறையின் வெவ்வேறு பிரிவுகள் கண்காணிப்பில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-1)

## யாழ்தேவி...

கொள்ளும் வேலைத்திட்டம் இடம்பெறவுள்ளது. மாணவர் ஒருவரிடம் இருந்து குறைந்தபட்சம் 2 ரூபாவும் ஆசிரியர் ஒருவரிடமிருந்து குறைந்த பட்சம் 10 ரூபாவும் அன்பளிப்பாகப் பெற எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதன்மூலம் புனரமைக்கப்படவுள்ள ஆனையிறவு ரயில் நிலையத்திற்கு நேசத்தின் தரிப்பிடம் என பெயர் சூட்டப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-1)

## அதிபர்...

அடையாளம் காணப்பட்டுள்ளார். கொல்லப்பட்ட மற்றையவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)


## COMPUTER REPAIRING

சகலவிதமான கணணிகளும் உங்கள் வீடுகளுக்கோ, அல்லது நிறுவனங்களுக்கோ வந்து ஒரே நாட்களில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

**STR COMPUTER SYSTEM**
384, Navalar Road, Nallur, Jaffna
Tel: 021-2224459, 0774192275
(C-2712)

**STR COMPUTER SYSTEM**
384, Navalar Road, Nallur, Jaffna
Tel: 021-2224459, 021-4590775, 0774192275, Fax :021-2224460.

## COMPUTER CLASSES

அனைத்துப் பாடங்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன

**Certificat in Internet & E-Mail**

Chatting, Dawnloding, Web & E-Mail Address Creating, Net Calling என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

DURATION 2 WEEKS, Rs 1000 /=
(C-2711)

## வேலை வாய்ப்பு

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள நிறுவனத்திற்கு கீழே குறிப்பிட்ட தொழில் செய்வதற்கு அனுபவமுள்ள தொழில்நுட்பவியலாளர்கள் தேவை. அதிகூடிய சம்பளம் வழங்கப்படும்.

1. எலக்ரோனிக் உபகரணங்கள் திருத்துதல்
2. ஏயர் கொண்டிசன்கள் திருத்துதல் பொருத்துதல்
3. எலக்ரிக்கல் வேலைகள் உபகரணங்கள் திருத்துதல்

*குறிப்பு:-* அனுபவமில்லாதவர்கள் ஒப்பந்த அடிப்படையில் பயிற்சி அளிக்கப்பட்டு சேர்த்துக் கொள்ளப்படுவர். சேர விரும்புவோர் 12.07.2009 இற்கு முன்னர் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

**NEW ASIN CENTER**
56/15, ஸ்ரான்லி வீதி (வர்த்தக வங்கி முன்பாக), யாழ்ப்பாணம்.
(C-2709)

## புகைப்படப்பிடிப்பாளர் தேவை

குடாநாட்டில் பல பகுதிகளில் அமைக்கப்படவுள்ள எமது கிளை நிறுவனங்களிற்கு புகைப் படப்பிடிப்பாளர்கள் (வீடியோ அன் போட்டோ) தேவை.

**மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்**
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C-2708)

## நியூ சிற்றி ரேடர்ஸ்

சகலவிதமான றேடியோ கசற் ரெக்கோடர், வோக்மன், கார் றேடியோ, சொனி, பனசொனிக், எல்.ஜி.ரி.வி. டெக், சி.டி, டி வி.டி பிளேயர், டிஸ்அன்ரனா, பூஸ்டர், வயர், கிறைண்டர், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறசர் குக்கர், சார்ச்சர் லைற், சார்ச்சர் ரோச், சப்ளைசர், வூபர், சுவர், கை மணிக்கூடுகள், மின் விசிறிகள், மண்ணெண்ணைய் அடுப்புகள், அன்பளிப்பு, அலங்கார பொருட்கள், புட்போல், வொளிபோல் முதலியவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும்.

மேற்குறிப்பிட்ட பொருட்களை சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளவும் நாடுங்கள்.

**நியூ சிற்றி ரேடேர்ஸ்,**
319 A, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 3226
(மேற்படி ஸ்தாபனம் ஸ்ரான்லி றோட் K.K.S. றோட் சந்தியில் இருந்து 6ஆவது கடை)
(C-2710)


## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் செல்வநாயகம்



ஈவினை புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த இராசரத்தினம் செல்வநாயகம் 04.07.2009 (நேற்று) சனிக்கிழமை கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் அன்னம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் இராசம்மாவின் அன்பு மருமகனும், பவானி (ஆசிரியை, யா/ நவக்கிரி அ.மி த.க. பாடசாலை)யின் அன்புக் கணவரும், சுபாஜினி (குப்பிளான் விக்னேஸ்வரா முன்பள்ளி), மயூரிக்கா (மாணவி, அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி மனோரஞ்சிதமலரின் அன்புச் சகோதரனும், திருமதி பரமேஸ்வரி துரைராஜா, இ.சண்முகரட்ணம், திருமதி அனுஷ பவானி சிவகுமாரன் (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), திருமதி ஜெயந்திமாலா இரவீந்திரன் (சுவிஸ்), இ.முருகானந்ததாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மா.மஜீவன், திருமதி ந.மஞ்சுளா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.07.2009) ஞாயிற்றுக்கிழமை 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக ஈவினை மெதடிஸ்த சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி
பிள்ளைகள்

(C-2714)


## கொழும்பு விலைகளில் யாழ்ப்பாணத்திலும்...

**UPS**

| | |
|---|---|
| Techcom 650 W | 3900/- |
| DCP 650 W | 4400/- |
| Intex 600 W | 4400/- |
| Panora 600 W | 4600/- |
| Power Tree 650 W | 4750/- |

**MONITOR LCD**

| | |
|---|---|
| AOC / Topview 15" | 10900/- |
| Prolink 16" | 11000/- |
| Viewsonic / Samsung 17" | 13500/- |
| View / Samsung 19" | 17900/- |
| Envision / Prolink 22" | 24500/- |

**MOTHER BOARD**

| | |
|---|---|
| MSI 945 | 5000/- |
| 2 in 1 Processor with Board | 6750/- |
| Asrock G 31 | 5700/- |
| Foxconn G31 | 5700/- |
| Biostar G31 | 5900/- |
| Gigabyte G31 | 5900/- |
| Intel DG31 | 7750/- |

**DVD WRITTER**

| | |
|---|---|
| CD Writter | 2000/- |
| Combo Samsung | 2750/- |
| LG DVD Writter | 3250/- |
| Samsung DVD Writter | 3250/- |
| Asus Lightscribe DVD Writter | 3900/- |

**POWER SUPPLY**

| | |
|---|---|
| Intex 400 W | 1300/- |
| Techcom 450 W | 1450/- |
| Techcom 500 W | 1550/- |



**COMPUTER TABLE**
2900/- 3900/-

**FM Modulator**
990/-
(for Vechicle use)

**MP3 PLAYER**
• 2 GB • Display • MP3 • FM • Voice Record
3750/-

**MP4 PLAYER**
• 2 GB • MP4 • MP3 • Voice Record
4500/-

**DELL Branded PC**



• Core 2 Duo 2.8 Ghz
• DDR II 2 GB RAM
• 160 GB Hard Disk
• DVD Writter
• 10/100/1000 Ethernet LAN
• Dell Keyboard
• Dell Optical Mouse
• External USB Floppy Disk Drive
• Dell 19" LCD Monitor

69000/-

**ACCESSORIES**

| | |
|---|---|
| TV Card Internal | 2700/- |
| Cobo Box | 2750/- |
| LCD Combo Box | 4600/- |
| VGA Card 512 MB PCI Express | 5250/- |
| Sound Card | 850/- |
| Keyboard | 500/- |
| Optical Mouse | 350/- |
| Speaker | 550/- |
| Modem 56 K | 650/- |
| Webcam | 1200/- |

**PRINTER**

| | |
|---|---|
| HP D1560 Colour | 4500/- |
| Cannon IP1980 Colour | 5250/- |
| Kyocera FS820 Laserjet | 13500/- |
| HP 1005 Laserjet | 13900/- |

**HARD DISK**

| | |
|---|---|
| 120 GB SATA | 4900/- |
| 160 GB SATA | 5400/- |
| 250 GB SATA | 5600/- |
| 320 GB SATA | 6500/- |
| 500 GB SATA | 8200/- |

**SCANNER**

| | |
|---|---|
| Musteck 1248 UB | 5750/- |
| Cannon lide 100 | 6250/- |
| HP G2410 | 7900/- |

**RAM**

| | |
|---|---|
| SD Ram 256 MB | 1000/- |
| DDR I 512 MB | 2900/- |
| DDR II 512 MB | 1200/- |
| DDR II 1 GB | 1700/- |
| DDR II 2 GB | 3100/- |

**CASING (All Brands)**

| | |
|---|---|
| Casing Black without Power Supply | 1500/- |
| ATX Casing with Power Supply | 2,750/- |

**MUSIC WORLD & COMPUTERS**
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி.
தொலைபேசி/பக்ஸ்: 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)

* Stock Available
* Warranty Value 1-3 years


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.